Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 13 (11.09.2003) வியாழக்கிழமை இதழ்: 342


கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா




ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

# தமிழ்ச்செல்வன் – டென்மார்க் தூதுவர் கிளிநொச்சியில் நேற்று சந்தித்து பேச்சு!



நேற்றைய சந்திப்பில் டென்மார்க் தூதுவர் மைக்கேல் ஸ்ரென்பேர்க்.



நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட சமாதானச் செயலக பிரதிப் பணிப்பாளர் செல்வி, அரசியற்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், ஜோர்ஜ்

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் டென்மார்க் தூதுவர் மைக்கேல் ஸ்ரென்பேர்க்கிற்கும் இடையேயான சந்திப்பு நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்றது.

நேற்றுப் பகல் பதினொரு மணியிலிருந்து ஒரு மணி வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழர் தாயகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்கள் மற்றும் உதவி சம்பந்தமாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## யசுஷி அகாஷி இன்று வருகிறார்

(கொழும்பு)

ஜப்பான் சமாதான சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி இன்று இலங்கை வருகிறார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாகவும், ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்துவது குறித் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக நிமால் லெகே

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியாக இருந்த நிமால் குணதிலக, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு மற்றும் விசேட பிரிவுகளின் பொறுப்பதிகாரியாக நேற்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்ற உத்தரவை பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இன்று ஆரம்பமாகும்

# ரோக்கியோ மாநாட்டின் தொடர் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என புலிகள் முடிவு!

## ஜப்பானியத் தூதரகத்துக்கு அறிவிப்பு

(கிளிநொச்சி)

**கொழும்பில் இன்று ஆரம்பமாகும், ரோக்கியோ மாநாட்டின் தொடர்ச்சியாக இடம்பெறும் கூட்டத்தில் தாம் பங்குகொள்ளப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் முடிவுசெய்துள்ளனர்.**

**இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்துக்கு விடுதலைப் புலிகளால் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

ஜப்பானிய தூதரகத்தினால் கொழும்பில் நடத்தப்பட இருக்கும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் புலிகள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

ஒட்டுமொத்தத் தமிழ்மக்களின் கூட்டு மனச்சாட்சிக் குரலின் ஆணைப்படி, கொழும்பு மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவுக்கு விடுதலைப் புலிகள் வர நேர்ந்தது.

ஜப்பானில் ரோக்கியோ மாநாடு நடைபெற்றபோது நிலவிய சூழ்நிலையில் தற்போது எந்த விதத்திலும், எந்த வகையிலும் மாற்றங் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்களைக் கட்டுப்படுத்த லண்டனில் தனி அதிரடிப்படை அமைப்பு!

லண்டனில், தமிழர் குழுக்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக 'ஸ்கொட்லன்ட் யார்ட்' ஒரு தனி அதிரடிப்படையை அமைத்துள்ளது.

தமிழ் இளைஞர் குழுக்கள், கடந்த சில ஆண்டுகளாக - கொலை, அடிதடி போன்ற வன்முறைகளிலும் கிறடிட் காட் மோசடிகளிலும் மற்றும் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றன.

'ஸ்கொட்லன்ட்யார்டின்' இந்த விசேட அதிரடிப்படை நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து இந்தப் பிரச்சினை பற்றிய தகவல்களைக் வழங்கியது.

சுமார் 80 ஆயிரம் இலங்கைத் தமிழர் வாழும் லண்டனில் 150 இளைஞர்கள் மட்டும் தான் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று ஸ்கொட்லன்ட்யாட்டின் துணை உதவிக் கமிஷனர் கூறினார்.

இலங்கைத் தமிழ் மக்கள் சட்டம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி பலகல்லவை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு!

### வவுனியா நீதிபதி இளஞ்செழியன் விடுத்தார்

1995 ஆம் ஆண்டு முல்லைத் தீவுப் பகுதியில் வைத்து - படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக, இராணுவத் தளபதி லயனல் பலகல்லவை வவுனியா நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் பணித்துள்ளது.

1995 ஆம் ஆண்டு மரியதாஸ் என்பவர், படையினரால் கைதுசெய்யப்பட்டார். இவரைப் பற்றிய தகவல் எதுவும் படையினரால் வெளியிடப் படவில்லை. இதுகுறித்த தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமெனக் கோரி, இந்த நபரின் சகோதரியினால் மேன் முறையீட்டு நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விசாரணையை, வவுனியா நீதிமன்றத்தில் மேற்கொள்ளுமாறு (10 ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை சமஷ்டியை ஏற்படுத்த தடையாக இராது!

### என்கிறார் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை, சமஷ்டி ஆட்சி முறையை அறிமுகப்படுத்துவதற்குத் தடையாக அமையாதென, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டைப் பிராந்தியங்களாகப் பிரித்து, அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கும் வேளையில் ஆட்புல ஒருமைப்பாட்டைக் கட்டிக்காப்பதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை அவசியமென அவர் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி - நாடாளுமன்றத்துக்கு வழிகள் கூறக் கடமைப்பட்டவராகவும், நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டவராகவும் இருக்கும்வகையில் இந்த முறையை மாற்றவேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஜேர்மனியில் அமைந்துள்ள சமஷ்டி முறை பற்றி ஆராயவே இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபைகள் போன்று நாடு முழுவதும் சமமான வகையில் அதி (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பலகல்லவுக்கு மட்டுமல்ல பல பேருக்கு அழைப்பு வரும்தானே...!

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# பளைக் கல்விக்கோட்ட பாடசாலைகளின் கணித, விஞ்ஞானப் போட்டி முடிவுகள்!

பளைக் கல்விக்கோட்டப் பாடசாலைகள் மத்தியில் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டி - 2003 இன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரிவு ரீதியாக இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு-

**தரம் 06**

அ.ஸ்ரீபன் (பளை மத்திய கல்லூரி), இ.நிரூபி (பளை மத்திய கல்லூரி),வெ.யோவ்வேல் (பளை றோ.க.த.க பாடசாலை).

**தரம் 07**

அ.ரேணுகா (பளை மத்திய கல்லூரி), த.தர்மராஜ் (பளை மத்திய கல்லூரி), ச.பிரதீபன் (வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை).

**தரம் 08**

சி.வினோதரன் (பளை மத்திய கல்லூரி), வி.விதுஷா (பளை மத்திய கல்லூரி), சி.ஜெனார்த்தனி (மாசார் அ.த.க பாடசாலை),

**தரம் 09**

ம.பிரசாந்தினி (சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), த.தர்மராஜினி (பளை மத்திய கல்லூரி), இ.தபோதினி (சோரன்பற்று கணேசா வித்தியாலயம்).

**தரம் 10**

பா.உதயேந்திரன் (பளை மத்திய கல்லூரி), சி.சுகிர்தா (பளை மத்திய கல்லூரி), வீ.கலைவாணி (மாசார் அ.த.க.பாடசாலை).

**தரம் 11**

மு.சுஜீபா (வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை), கு.கேதிகா (வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை), சு.யோர்கலட்சுமி (பளை மத்திய கல்லூரி).

**தரம் 12/13**

தி.மயூரன் (பளை மத்திய கல்லூரி), சி.உமைசொரூபி (பளை மத்திய கல்லூரி), த.வாகீசன் (பளை மத்திய கல்லூரி).

## பளைப்பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு

பளைப்பிரதேசத்தில் டெங்கு குடம்பிகளை ஒழிக்கும் நடவடிக்கையினை, பளை சுகாதாரப் பிரிவினரும் பளைப் பிரதேச சபையினரும் ஆரம்பித்துள்ளனர்.

பளைப் பிரதேசத்திலுள்ள - வர்த்தக நிலையங்கள், வீதிகள் சந்தைகள் பொது இடங்கள் ஆகியவற்றில் நீர் தேங்கியிருக்கக்கூடிய தகர பிளாஸ் ரிக் ரின்கள், சிரட்டைகள், பழைய ரயர்கள், பொலித்தீன் என்பன எரிக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் வருகின்றன.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், 'அம்பாசு அங்கன்பானி' என்ற மணிப்புரி மொழிப்படம், ஆங்கில உப தலைப்புக்களுடன் - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். இது விழிப்புலன் இழந்த ஒரு பாடகனின் கதையைச் சித்திரிக்கிறது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கிறார்.


நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், பிரியங்கா சோப்ரா நடித்த

தமிழன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

WISH MASTER
(கராட்டிப் படம்)

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், சினேகா நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1424)


# UNIVERSITY OF JAFFNA
# FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME
# IN B.Sc.AGRICULTURE (2003/2004)

Application Will be entertained by the Dean, faculty of Agriculture, University of Jaffna for Admission of Public Officers for Degree Programme to follow B.Sc.Agriculture as internal students for the Academic year 2003/2004.

The applicant should have the following qualifications:-

1. At least 3 passes in the following subjects, in the G.C.E (A/L) Examination at one sitting and minimum requirements for University Admission.

(a) Botany
(b) Zoology
(c) Chemistry
(d) Physics
(e) Agriculture

OR

Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

Age: Candidate should be less than 45 years of age at the time of closing date.

Applications froms may be obtained from the Assistant Registrar, Examination & Admission Branch, University of Jaffna, on a payment of Rs.50/- each at the Shroof Counter or People's bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.50/- drawn in favour of the Bursar, University of Jaffna, Thirunelvely, and a self addressed stamped envelope (for Rs.4.50) not less than 9`` x 4`` size.

Date of closing is 30.09.2003.

Application should be forwarded through the relevant Heads of Department.
Selected candidates will be called to sit for a written test and an Oral Examination.
No application will be entertained after the closing date.

(சி-1481)

*REGISTRAR.*


# கோலாகலத் திறப்பு விழா



இலங்கையின் அதிசிறந்த வங்கியென
பல விருதுகளைப் பெற்ற கொமர்ஷல் வங்கியின்
111வது கிளை, நெல்லியடியில்
இல.333, மத்திய மகா வித்தியாலய வீதியிலுள்ள
பொன்னையா கட்டடத்தில்
அதன் தலைவர் திரு.மகேந்திர அமரசூரிய அவர்களால்
இன்று 11.09.2003 வியாழக்கிழமை
சுபவேளையான காலை 9.47 மணிக்கு
வைபவரீதியாக திறந்துவைக்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்!



உயர் தொழில்நுட்பத்துடன் கூடியதும், நாடு பூராகவும் பரந்த
கணினி மயமாக்கப்பட்ட வலையமைப்பைக் கொண்டதும்,
தனித்துவமானதும், திறமைமிக்கதுமான வங்கிச் சேவைகளை
வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவரும் எமது வங்கியின்,
நெல்லியடிக் கிளையின் திறப்பு விழாவில் கலந்து கொள்ளும்படி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

கொமர்ஷல் வங்கி
"உங்கள் நலமே எங்கள் நோக்கம்"

(சி-1478)

# சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல கடந்த அனுபவங்களை மீட்டுப் பார்க்கவேண்டும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முனனெடுத்துச் செல்ல வேண்டுமானால், கடந்தகால அனுபவங்களை மீட்டுப் பார்க்கவேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலேசியாவில் வைத்து, த ஸ்ரார் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

முன்னைய அனுபவங்களை மீட்டுப்பார்ப்பதன் மூலமே, தவறுகளைத் திருத்தி முன்னோக்கி நகரமுடியும். சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட, இது பிரதான காரணமாகும். சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்த முதலாவது அரசியல்வாதியாகத் தான் இருந்திருந்தால், தானும் பல்வேறு தவறுகளை இழைத்திருக்க வேண்டியிருக்குமெனவும், அவர் தெரிவித்தார்.

விஞ்ஞான தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலேசிய நாட்டு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சரான லோகெயின்ரீனை கோலாலம்பூரில் சந்தித்துப் பேசசுவார்த்தை நடாத்தியுள்ளார்.



மேலும், மலேசியாவின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுட்பட பலவேறு விடயங்கள் குறித்து, மலேசிய அதிகாரிகள் பிரதமரிடம் விரிவாக விளக்கியுள்ளனர். அத்துடன் சூழல், சுற்றாடல் விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# ஜனவரி மாதத்தில் கல்வியியல் கல்லூரியில் பட்டம்பெற்ற மூவாயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம்

தேசிய கல்வியியல் கல்லூரியில் - படித்துப் பட்டம் பெற்றுள்ள 3000 பேருக்கு, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளதாக, அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் 3000 ஆசிரிய மாணவர்கள் தமது இறுதிப் பரீட்சையை எழுதவுள்ளதாகவும் - அவர்கள் ஆசிரிய சேவைக்காக உள்வாங்கப்படுவார்கள் எனவும் - அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரிய மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள், ஜனவரி மாதத்திற்குள் வெளிவரும் சாத்தியம் இல்லாதபோதிலும் - இவர்கள் பணியில் சேர்த்துக்கொள்ளப்படக் கூடும் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் அனைவரும் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் நியமனம் செய்யப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

# எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பிற்கும், மட்டக்களப்பிற்கும் இடையிலான ரயில் சேவை மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவையானது புகையிரத பாதைகள் சீரின்மையால், சொற்ப நாட்களுக்குள்ளேயே நிறுத்தப்பட்டது. தற்போது ரயில்பாதைகள் செப்பனிடப்பட்டுள்ளதாகவும், மீண்டும் ரயில் சேவைகள் சிறப்பான முறையில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இந்தச் சேவையில் அடுத்தடுத்து மூன்று தடவைகள் விபத்துக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## போலியோ சொட்டு மருந்து வழங்கல்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 10 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து, இந்த மாதம் 20 ஆம் திகதியும் அடுத்தமாதம் 18 ஆம் திகதியும் வழங்கப்பட இருக்கிறது.

இந்த நடவடிக்கைகளுக்கு யுனிசெப் நிறுவனம் அனுசரனை வழங்கும். போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை இதுவே கடைசித் தடவையாக மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு பொலிஸ் ஆணைக்குழு தேவையல்ல

## அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குச் சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுக்கள் தேவையில்லை. இவ்வாறு, கடல்வள நீரியல் துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர திவயன பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுக்கள் அமைக்கும் அரசின் முயற்சியானது, தேவையற்ற செயல் ஆகும். இவ்வாறான செயற்பாடுகள் பொலிஸாரின் நடத்தைகளைக் கவனிப்பதைக் கடினமாக்கும். இதனால், நாட்டிற்கே கெடுதல் உண்டாகும்.

தொடர்ந்தும் பொலிஸ் சேவை உள்துறை அமைச்சின் கீழ் இருப்பதே சிறப்பானது எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

# மகரகம வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

(கொழும்பு)

மகரகம புற்றுநோய் மருத்துவமனையில் உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், அடிப்படை வசதிகளுமில்லாதநிலை தொடர்வதாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக, நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்ததாக, அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கு பத்து முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மருத்துவர்கள் அதற்கு மாற்றீடாக வேறு மருந்து வகைகளைப் பயன்படுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. மற்றொரு முக்கிய சிகிச்சையளிக்கும் தொழில்நுட்பச் சாதனம் ஒன்று உடைந்த நிலையில் ஓராண்டு காலம் திருத்தப்படாமலுள்ளது. இந்தச் சாதனம் ஒன்றேயொன்று மட்டுமே நாட்டிலுள்ளது என்பதும் குறிப் பிடத்தக்கது. இந்தச் சாதனமின்றி மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வது கடினம் என்று, மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் இருபத்துநான்காயிரம் தாதிகள் பற்றாக்குறை

## தாதியர் சங்க அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் 24,000 தாதியருக்குப் பற்றாக்குறை நிலவுவதாகப் பொது வைத்தியசாலை தாதியர் சங்சம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இடமாற்றம் பெற்றுள்ள ஆயிரம் தாதியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய இடங்களில் கடமையாற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாதியர் பற்றாக்குறை காரணமாக, ஏனைய தாதியர் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியாதநிலை ஏற்பட்டிருப்பதாக, சங்கத்தின் தலைவர் மொறதெட்டுவை ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் நேற்றுமுன்தினம் விசேட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இதேவேளை - தாதியர் பற்றாக்குறை சம்பந்தமாக சுகாதார அமைச்சர் தயாரத்ன தெரிவிக்கையில், தாம தாதியர் பற்றாகுறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்திருப்பதாகவும், எனினும் இந்தப் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யமுடியாதெனவும், இந்தமுறை 3500 தாதியர் புதிதாகப் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், இலங்கை மருத்துவத்துறையினர் இவ்வாறு கூடுதலான எண்ணிக்கையானோருக்குப் பயிற்சி அளிக்கப்படுவது இதுதான் முதற் தடவையெனவும் கூறினார்.

# ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி கூட்டு முறிந்தது தற்காலிகமான விவாகரத்துப் போன்றதே!

## என்கிறார் அனுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பிக்கு இடையேயான பேச்சுவார்த்தை முறிவடைந்தமையானது, தற்காலிக ஓர் விவகாரத்து என்றே கூறவேண்டும் என, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.



கூட்டமைப்பிற்கான பேச்சுவார்த்தைகள் பின்னடைவைச் சந்தித்து இருந்தாலும்கூட, இது விடயத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு சந்தேகப்படமுடியாது.

தொடர்ந்தும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி உட்பட, தனது கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேலும் தீவிரமாக மேற்கொள்ளவுள்ளது என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பாதையிலிருந்து ஒருபோதும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு விலகிச்செல்லாது என்றும், நாடு இப்போது எதிர் கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து அதனை விடுதலை செய்வதற்கு தொடர்ந்து போராடும் என்றும், அவர் கூறினார்.

எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் சாத்தியம் உள்ளது என்றும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி இன்னும் மூன்றாணடு பதவியிலிருக்கப் போகிறார். இந்தக் காலத்தில் ஐ.தே.கட்சி அதிருப்தியாளர்களின் ஒத்துழைப்புடன், ரணில் அரசை தோற்கடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆதரவளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## கற்சிலைமடுவில் 625 பேருக்கு சிகிச்சை

தியாகதீபம் மருத்துவ சேவையினரால், முல்லைத்தீவு கற்சிலைமடு கிராமத்தில் சிறப்பு மருத்துவ முகாம் மூலம் 625 நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற இந்த சிறப்பு மருத்துவ சேவையில் - கண், பல், குழந்தை மருத்துவம், பொது மருத்துவம், இதயநோயாளிகளுக்கான ஆலோசனை என்பன வழங்கப்பட்டது.

மேற்படி மருத்துவசேவையில் பலதரப்பட்ட நோய்களைச் சேர்ந்த 625 நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. வன்னிப் பகுதியில் வைத்தியர்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், திலீபன் மருத்துவ சேவையினரால் நடாத்தப்பட்டு வரும இவ்வாறான மருத்துவ சேவைகள் மிகுந்த பயனையளிப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

# உலக வர்த்தக ஸ்தாபன மாநாட்டில் ரவி கருணாநாயக்க பங்கேற்பு

மெக்சிக்கோவிலுள்ள ஹெங்கிங் நகரில் நடைபெறுகின்ற உலக வர்த்தக ஸ்தாபனத்தின் மாநாட்டில்- இலங்கை சார்பாக வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க பங்குபற்றியுள்ளார்.

தொடர்ந்து 5 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் - 146 நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

சுதந்திர வர்த்தகம் தொடர்பாகத் தோன்றியுள்ள சர்ச்சை, விவசாயத் துறையின் சீர்திருத்த ஏற்பாடு ஆகியன முக்கியமாக இந்த மாநாட்டில் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதார சேவை ஊழியர்கள் மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதிக்கும் அபாயம்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள சுகாதார சேவை ஊழியர்கள் - தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கும் நிலை தோன்றியுள்ளது.

சுகாதார சேவை ஊழியர்கள் எதிர்நோக்கும் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறு கோரி, முன்னர் சுகாதார சேவை ஊழியர்கள் ஒரு நாள் சுகவீனப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தின் முடிவில் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னதாக, தமது சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால், இது தொடர்பான பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு அமைச்சு ராஜித சேனாரத்ன பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

இவர் திறைசேரியுடன் நடத்திய பேச்சுக்களின்போது, எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக இது தொடர்பாகத் தீர்வுகூறமுடியாது என திறைசேரி தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

இதனாலேயே சுகாதார சேவை ஊழியர்கள் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுவதற்காகத் தற்போது அமைச்சர் கரு ஜெயசூரியா நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

சுகாதார சேவை ஊழியர்கள் அமைச்சர் கரு ஜெயசூரியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும், அவை முறிவடையும் தறுவாயில் மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# விடுதலைப் போராட்டத்தின் இலக்கியங்கள் வரையறைகளை மீறியதாகவே இருக்கும்

## மூத்த உறுப்பினர் பாலகுமாரன்

விடுதலைப் போராட்டம் என்பது மரபுடைப்பது, கட்டுடைப்பது, தளை யறுப்பது என்ற எல்லாவற்றையும்



தாணடி, இலக்கணங்களையும் தாண்டி மீறி வருகிறது. அது தொடர்பான இலக்கியங்களும் அவ்வாறேதான் அமையும். புதிய கருத்துக்கள் புகுத் தப்பட்ட சிறுகதை என்ற வடிவம் கூட, ஒரு புதிய பரிமாணமாகத்தான் உள்ளது. இவ்வாறு, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த சனிக் கிழமை வெளியிட்டு வைக்கப்பட்ட, ஆ.ரவியின் "காலமாகிவந்த கதை" நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு ரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடு கையில் -

எனக்கு, அண்மைக் காலமாக நடக்கின்ற விடயங்களைப் பார்க்கும் போது, சைபீரியாவிலிருந்து பறவை கள் எமது சுண்டிக்குளத்தை அண் டிய பகுதிகளுக்கு வருகின்ற மாதிரி, கூடு தேடிச் சென்றவர்கள் எல்லாம் இங்கு கூடு கட்டுவதற்காக வருகின் றார்கள். கூடும் கட்டுகிறார்கள். அவர் கள் எங்களுக்கு இரை தருகிறார் கள். பணமாகவும் தருகின்றார்கள். நல்ல உதவியும் புரிகின்றார்கள் இதைவிட, உதவிபோல நல்ல அற் புதமான படைப்புக்களினூடாக கருத் துக்களைத் தருகின்றார்கள்.

இந்தத் தருகை என்பதைத் தக்க வைக்கின்ற இடமாக வன்னி திகழ் கின்றது. என்னைப் பொறுத்தவரை யில் இந்த வன்னியில் ஒவ்வொரு நாள் வாழ்வும் என்னால் விரும்பத் தக்கது. புத்துயிர் உலகமாக மாறிக் கொண்டு போகிறது.

ரவி தன்னுடைய எழுத்திலே ஒரு வரியைச் சொல்லுகிறார். 'தனித் துப்போனேன், தனியுலகானேன். என்னுடைய வாழ்வில் ஒரு துண்டை எடுத்து மீட்டினேன். அந்தத் துண்டு ஒரு ஆக்க இலக்கியமாக மலர்ந் ததால், அந்த நினைவுத்துண்டம் உள்ளது' என்று சொல்லியுள்ளார்.

உண்மையிலே அதை மீட்டும் போது, அதிலே எமது துன்ப யாழ் அவருடைய மீட்டும் கரங்களிலேயே மீட்டுவீகளாக இருந்தால், அடிப்படை வாழ்வினூடாக ஒரு சோகம் நிரம் பியிருப்பதைக் காண்பீர்கள். துன்ப யாழை எடுத்து மீட்டுவதுபோல, அவ ருடைய இந்த ஏக்கம் அமைந்திருப் பதை நீங்கள் காணமுடியும்.

விடுதலைப் போராட்டம் என்பது மரபுடைப்பது, கட்டுடைப்பது, தளை யறுப்பது என்ற எல்லாவற்றையும் தாண்டி, இலக்கணங்களையும் தாண்டி மீறி வருகிறது. அது தொடர்பான இலக்கியங்களும் அவ்வாறேதான் அமையும். இருபதாம் நூற்றாண்டிலே பழைய செய்யுள் முறையிலிருந்து கவிதை கட்டுடைத்தது. எதுகை, மோனை அறுக்கப்பட்டது. கருத்த ளவு அறுக்கப்பட்டது. புதிய கருத் துக்கள் புகுத்தப்பட்டன. சிறுகதை என்ற வடிவம்கூட ஒரு புதிய பரிமா ணமாகத்தான் உள்ளது. புதுவையின் 'உலைக்களம்' இன்னொரு வகை யான கட்டுடைப்பு. இந்தப் படைப்பு என்பது - சிறுகதைகளின் மீட்சி என்பது, ஒரு புதிய வடிவமாக மாறு கிறது. அது குறுங்கதையுமல்ல, நாவலுமல்ல இன்னுமொரு புதிய வடிவமாகும். இந்த வடிவத்தைத் தேடித்திரிந்தோம்.

தேசியத் தலைவருக்கும், தளபதி களுக்கும், உங்களுக்கும், எங்க ளுக்கும், எல்லோருக்கும் நன்றி சொல் லுகின்றார்கள். எனக்கு மிகவும் பிடித்த சொல், 'வீரச்செருக்கு' என்ற சொல். நாங்கள் தேடிக்கொண்டிருந் தோம் இப்போது கிடைத்துள்ளது.

அது மாத்திரமல்ல இந்தப் போராட்டத்தினுடைய பலம், பலவீ னம், தகுதி, தவறு அத்தனை யோடும். அதனை நேசிக்கின்றேன் என்று கூறியுள்ளார். அது ஒரு பெரிய சக்தி அதாவது, வருகை ஒரு தெளி வாக உள்ளது எனத் தெரிவித்தார். (122)

# மருதங்கேணி வைத்தியசாலையின் புனரமைப்பு வேலை நிறைவேறுகிறது

மருதங்கேணி அரசினர் வைத்தி யசாலை, விரைவாகப் புனரமைக் கப்பட்டு வருகிறது. எதிர்வரும் தை மாதம் இந்த வைத்தியசாலை, மக்களுக்கு சுகாதாரசேவைகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின் றது.

இந்த வைத்தியசாலையில் 7 கட்டடங்கள் கட்டப்பட்டு, முடிவுறும் தறுவாயில் உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதன் புனரமைப்பு வேலைக ளுக்காக ஆசிய அபிவிருத்தி வங் கியினர் - 2 கோடியே 30 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியிருந்தனர்.

இந்த வைத்தியசாலையில் - பிர சவ விடுதி, ஆண் நோயாளர் விடுதி, பெண் நோயாளர்விடுதி, வெளிநோ யாளர் பிரிவு, பிரேதஅறை, தாதி யர்களுக்கான விடுதி, வைத்தியர்க ளுக்கான விடுதி, நிர்வாகஅறை, வாகனம் தங்குமிடம் என்பன அமைக் கப்பட்டு வருகின்றன. அம்புலன்ஸ் வண்டியொன்றும் வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# யுனிசெப் வெளிக்கள உத்தியோகத்தருக்கு கடந்த திங்கட்கிழமை பாராட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகளினால், யுனிசெப் நிறு வன - யாழ்ப்பாண மாவட்ட வெளிக் கள உத்தியோகத்தர் செலினுக்குக் கடந்த திங்கட்கிழமை பாராட்டு விழா வொன்று நடத்தப்பட்டுள்ளது.

இவரது முயற்சியினால், ஏனைய மாவட்டங்களைவிட, யாழ். மாவட் டத்தில் ஐந்து திட்டங்களுக்கு இரு பத்தைந்து மில்லியன் ரூபா கிடைக் கப் பெற்றுள்ளது. இவற்றில் நான்கு கல்வி அபிவிருத்திக்கும், மற்றை யது நீர்ப்பாசனத் திட்டத்திற்குமா னதுமாகும்.

கல்வி அபிவிருத்திக்கு ஒதுக் கப்பட்ட நிதியில் - வசதிகளற்ற பின் தங்கிய நிலையிலுள்ள எழுபத் தைந்து ஆரம்பப் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந் தத் திட்டங்கள் யாவும் இந்த வருடம் மே மாதம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அடுத்த வருட மே மாத காலப்பகுதிக்குள் நிறைவடைந்து விடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

வலயக் கல்விப் பணிமனை யில் நடந்த இந்த நிகழ்வில்- வல யக் கல்விப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

சாவகச்சேரி, கொடிகாமம் பிர தேச தேசிய எழுச்சிப் பேரவையி னரின் மாதாந்த சங்கம நிகழ்வு - கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன.

ஞாயிறு நடந்த இந்த சங்கம நிகழ்வில் - மந்துவில் மேற்கு கிராமத்தில் மாவீரர் படிப்பகம் திறப் பது, மாவீரர்களது பெயர்ப்பலகை யினைப் புதுப்பித்தல், மாவீரர், போராளி குடும்பங்களைச் சந்திப்பது, போக்குவரத்து வசதிகள் செய்வது மற்றும் கெற்பலி, விடத்தற்பளை, கிளாலி ஆகிய இடங்களில் மகப் பேற்று மனைகளைப் புனரமைப்பது போன்ற விடயங்களை நடைமுறைப் படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (34)

# வரவு செலவுத்திட்ட உதவியாளர் யாழ். செயலகத்திற்கு நியமிப்பு

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலி ருந்து 'வரவு - செலவுத்திட்ட உதவியாளர்' ஒருவர் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் மேற்படி பதவியை வகித்து வந்தவர், 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து பதவி விலகியதை அடுத்து, வெற்றிடமாகவிருந்த பதவிக்கே எவ்.ஆர்.டி.தட்சாயினி நியமிக் கப்பட்டுள்ளார்.

மாவட்டத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையிலுள்ள இந்தப் பதவிக்குரிய கடமைகளை 2001 ஆம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து பொது எழுதுநர் சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவரே மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (24)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்

பெயர் : ட.அன்ரனைஸ்

முகவரி : 140, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------

பெற்றார் ஒப்ப...

# தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவு தொகை வழங்கப்படாததால் பெருமளவான குடும்பங்கள் பாதிப்பு

(ஆழியவளை)

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவுதொகைகள் வழங்கப்படா மையினால், தென்மராட்சிப் பகுதி யில் பெருமளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செய லக வட்டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு, மீளக்குடியேறிய மக்களில் 13,375 குடும்பங்கள் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுபெறத் தகுதியானவர் கள் என இனங்காணப்பட்டுள்ள போதும், இன்னமும் 10 ஆயிரத் துக்கு மேற்பட்ட குடும்பங்களிற்குக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இதேவேளை, இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் தங்களது வீடுகள் அகப்பட்டுக் கொண்டதால், அவதிப்படும் மக் களுக்குக்கூட இன்னமும் இந்த மீளக்குடியமர்வு தொகை வழங் கப்படாததால், அவர்களது நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

### வான் மோதியதில் யுவதி படுகாயம்

துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த யுவதியை வான் மோதியதில், யுவதி படுகாயம டைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாயன்மார் கட்டு சந்தியில் நடந்த இந்தச் சம்ப வத்தில், அரியாலையைச் சேர்ந்த பா.கௌரி (வயது 26) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் நின்ற பொது மக்கள் சிலர் யுவதியை மோதிய வாகனத்தைத் தாக்கிச் சேதப்படுத்தி னர். (55)

# அரச திணைக்களங்களில் கணக்காளர் சேவையின் பதவிப் பெயர்கள் மாற்றம்

(மட்டுவில்)

அரச திணைக்களங்களில் கணக் காளர் சேவையில் உள்ளவர்களது பதவிப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ள தாக, திறைசேரிச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மாவட்டச் செயலக பிரதம கணக்கா ளர்- மேலதிக மாவட்டச் செயலாளர் (நிதி) எனவும், செயலக கணக்காளர்- உதவி மாவட்டச் செயலாளர் (நிதி) எனவும், பிரதேச செயலகக் கணக்காளர்கள் - உதவிப் பிரதேச செயலர் (நிதி) எனவும் மாற்றப்பட் டுள்ளது. இந்தப் பதவிப் பெயர் மாற்றங்கள் உடனடியாக நடை முறைக்கு வருவதாக, அரச அதிபரால் சகல பிரதேச செயலகங் களுக்கும், சம்பந்தப்பட்ட அலுவலர் களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு நெல்லை சந்தைப்படுத்த முடியாததால் சிறுபோகத்தில் ஈடுபடமுடியாத நிலை

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்ட விவசாயி களுக்கு - காலபோக நெல்லைச் சந்தைப்படுத்த முடியாதநிலை ஏற் பட்டுள்ளதால், தொடர்ந்தும் நெற் செய்கையில ஈடுபடமுடியாத நிலை யிலுள்ளதாக, கரைச்சி பிரதேச செய லாளரிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த காலபோகத்தில் அறு வடை செய்த நெல்லினை, இது வரை சந்தைப்படுத்த முடியாத நிலையில் இருக்கையில், சிறுபோக நெல் அறுவடையும் தற்போது நடைபெற்று வருகிறது.

தற்போது கூலியாட்களுக்கு ஏற் பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக- ஒரு ஏக்கர் நெற்செய்கை அறுவடை செய்யும்வரை இருபதினாயிரம் ரூபா வரை செலவு செய்யவேண்டியுள்ள தாகவும், அந்த நிலையில் கால போக விளை நெல்லினைச் சந்தைப் படுத்தமுடியாது தேங்கியுள்ள நிலை யில், சிறுபோக நெல்லும் சந்தைப்ப டுத்த முடியாதநிலை தோன்றி யுள்ளது. இதன் காரணமாக, விவ சாய நிலமான கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தொடர்ந்தும் நெற் செய்கையில் ஈடுபடமுடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# பாதுகாப்புப் பயிர்ச்செய்கையும் கையாளும் முறைகளும்


*(சென்றவாரத் தொடர்ச்சி)*

படையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல் மிகவும் அவசியம். போகம் முடிவடைந்து அறுவடை செய்தபின்னர், உயிர் மூடுபடையைத் தன்னிச்சைப்படி வளர விடுவதன்மூலம் சிறப்பாகக் களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

### 5. விவசாய வனவளர்ப்பு முறை

பாதுகாப்புப் பயிர்ச்செய்கையின் ஒரு முக்கிய உப முறை, விவசாய வனவளர்ப்பு முறையாகும். இந்த முறையில் பயிர்களுடன் ஒரே நேரத்தில் வன மரங்களும் சேர்த்து வளர்க்கப்படுகிறது. விவசாய வனவளர்ப்பில் பலமுறைகள் உண்டு. அவற்றுள் பிரதானமான இரண்டு முறைகளை மட்டும் விரிவாக ஆராய்வோம். ஒன்று - வீதி அல்லது ஓடை முறையில் வன மரங்களை வளர்த்தல், மற்றையது - பயிர்களுடன் வன மரங்களைக் கலந்து, பல்லினப் பயிர்ச்செய்கைமுறையில் வளர்த்தல்.

**(அ) வீதி அல்லது ஓடைமுறை பயிர்ச்செய்கை**
**(Avenue Cropping)**



சரிவான தரையில் வீதி முறைப் பயிர்ச்செய்கை செய்யப்படும் விதம்

இந்த முறையில் வரிசையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்லாண்டு வளரும் மரங்கள் நடப்படும். இரண்டு வரிசைகளுக்கிடையில் - 4 மீற்றர்கள் தூரம் இருத்தல் அவசியம். இந்த முறையில் பல்லாண்டு வளரும் அவரையினத் தாவரங்களான - "இப்பில் இப்பில், கிளிறிசிடியா, சொஸ்பேனியா" போன்ற தாவரங்களே நடப்படும். இந்த அவரையினத் தாவரங்கள் வளிமண்டல நைதரசனை வேர் முடிச்சுக்களில் பதிப்பதனால், மண் வளம்பெறுகின்றது.


ஒரு வருடத்திற்கு இந்த மரங்கள் வளரவிடப்படும். இந்தக் காலத்திலும் வரிசைகளுக்கிடையில் பயிர்களை செய்கை பண்ணலாம். மழைக்காலம் ஆரம்பிக்கும்போது, ஒரு மீற்றர் உயரத்தில் வரிசையிலுள்ள மரங்கள் யாவும் வெட்டப்படும். வெட்டும்போது கிடைக்கும் இலைகுழைகள், கிளைகள் வரிசைகளுக்கிடையில் மண்மேல் மூடுபடையாகப் பரப்பப்படும். இலைகள் தடிகளிலிருந்து உதிர்ந்ததும், தடிகளை விறகாகப் பாவிக்கலாம். இதன்பின், பயிருக்குப் போதியளவு சூரிய ஒளி கிடைக்காவிட்டால், மீண்டும் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் மரங்களை வெட்டலாம்.

பயிர்செய்யும் நிலத்தில் - பயிர் இல்லாத காலத்தில் வரிசையிலுள்ள மரங்கள் நன்கு வளரவிடப்படும். இதன் மூலம் நிலத்தில் விழும் சூரிய ஒளியின் அளவு குறைவதனால், களைகளின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும். இந்த முறை மூலம் பல்லாண்டு வளரும் புல்வகை, களைகளில் எண்பது சதவீதமானவற்றைக் கட்டுப்படுத்தலாம். பல்லாண்டு காலம் வளரும் இந்த வன மரங்களின் ஆழமான வேர்கள், மண்ணின் ஆழமான படையிலுள்ள போஷணைகளை உள்ளெடுக்கின்றன. இந்தத் தாவரங்களின் இலைகள் முதிர்ச்சியடைந்து தரையில் விழும்போது, அந்தப் போஷணைகளும் தரையின் மேற்பரப்பையடைவதனால், மேற்படையின் வளம் மேலும் அதிகரிக்கிறது. ஒரு ஹெக்டேயர் நிலப் பரப்பில் நடப்பட்ட இப்பில் இப்பில், கிளிறிசிடியா மரங்கள் ஒரு வருடத்தில் ஏறக்குறைய ஆறு தொன் உலர் இலைகுழைகளை உற்பத்தி செய்யக்கூடியன என்பது பரிசோதனைகள்மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பசளையிலிருந்து ஏறக்குறைய 230 கி.கி. நைதரசன் (N) மண்ணின் மேற்பரப்பையடைகின்றது (தனிப்பட்ட தொடர்பு).

சரிவான இடங்களிலும் இந்த முறையைப் பின்பற்றலாம். சரிவான இடங்களில், சமவுயரக்கோட்டின் வழியே ஒரு நிரையில் அல்லது பல நிரைகள் கொண்ட பட்டி போன்றதாக வன மரங்களை நடலாம். இந்த நிரைகள் அல்லது பட்டிகள் மண் அரிப்புக்கு ஒரு தடையாக அமைந்திருக்கும்.

இந்த வீதி முறை பயிர்ச்செய்கையை, சேனைச் செய்கையின் வேறுபட்ட ஒன்றாகக் கருதலாம். இந்த முறையிலுள்ள விசேட அனுகூலங்கள் - களை கட்டுப்பாடும், மண்ணின் வளம் பேணப்படுதலுமாகும். எனவே பயிர் செய்யும் இடத்தைவிட்டு, வேறோர் இடத்தைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்து, ஒரேயிடத்தில் தொடர்ந்து பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

**(ஆ) பல்லினப் பயிர்ச்செய்கை முறை**
**(வீட்டுத்தோட்ட வனச்செய்கை)**



பல்லினப் பயிர்ச்செய்கை முறை

விவசாய வனச்செய்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, வீட்டுத்தோட்ட வனச்செய்கைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் வீட்டைச்சுற்றிச் செய்கின்ற பயிர்ச்செய்கையில் பல பிரயோசனங்கள் தரக்கூடிய தாவரங்களைச் சேர்த்து நட்டுக்கொள்வதே, வீட்டுத்தோட்ட வனச்செய்கை ஆகும். இந்தத் தாவரங்களுள் - மரக்கறி வகைகள், பழமரங்கள், வெட்டு மரங்கள், விறகுக்கான மரங்கள், மூலிகை மரங்கள் என்பன அடங்கும். பொதுவாக, விவசாயிகள் தங்கள் வீட்டுக்கு அருகில் மரக்கறி வகைகளையும், வெட்டுமரங்களுக்குப் பாவிக்கக்கூடிய உயரமாக வளரும் மரங்களைத் தங்கள் காணியின் எல்லைகளிலும், இந்த இரண்டிற்கும் இடையில் பழவகைகள் மற்றும் ஏனைய மரங்களையும் நடுவார்கள். கால் நடைகள் வளர்ப்பதையும் இவற்றுடன் மேற்கொண்டால், இந்த முறையின் மூலம் மனிதன், தாவரங்கள், கால்நடைகளுக்கிடையே சமனான தொடர்பு ஏற்பட வாய்ப்புண்டு.

**பல்லினப் பயிர்ச்செய்கையைப் பாதிக்கின்ற காரணிகள்**


இலங்கையின் உயர்வலயத்தில் பல சந்தர்ப்பங்களில் சமூக, உயிரியல் பிரச்சினைகள் இந்த வீட்டுத்தோட்ட வனச்செய்கையின் அபிவிருத்தியைப் பாதிக்கிறது. இந்த பிரச்சினைகள் அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

- உலர் காலத்தில் மண் உலர்ந்து கடினமாதல்.
- மண்ணின் வளமற்ற தன்மை.
- களைகளின் வளர்ச்சி.
- பயிர் வளர்ச்சியடையும் காலத்தில் நிழல் குறைதல்.
- நடுவதற்குப் பயிர்களின் நடுகைப் பொருள் கிடைப்பது கடினம்.
- தொழில்நுட்ப அறிவின்மை.
- காட்டு விலங்குகளால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படல்.
- வீட்டு வளர்ப்பு மிருகங்களால் ஏற்படும் சேதம்.
- வீட்டு வளர்ப்புக் கால்நடைகளைத் (கோழி, ஆடு, மாடு) திருடுதல்.




மேற்கூறிய எல்லைப்படுத்தும் காரணிகளுள் - வரட்சி (மண்ணீரின் அளவு குறைதல்), மண்ணின் வளமற்ற தன்மை, களைகளின் வளர்ச்சி, வளர்ச்சிக் காலத்தில் நிழல் குறைவான தன்மை போன்றவற்றிற்குத் தீர்வாக, பயிர் நடுவதற்கு முதல் வருடமே வீட்டுத் தோட்டத்தில் கிளிறிசிடியா போன்ற மரங்களை வளர்க்கலாம். இவ்வாறு வளரும் கிளிறிசிடியா போன்ற மரங்கள், பயிரின் வளர்ச்சிக் காலத்தின்போது நிழலை வழங்குவதுடன், அவற்றை வெட்டுவதனால் பெறப்படும் இலைகள் - நிலத்தில் வீழ்ந்து உக்குவதனால், மண்ணீர் சேகரிக்கப்படுகின்றது. களைகளின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. மண்ணின் வளம் அதிகரிக்கிறது. இந்த மரங்களின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. இந்த மரங்களின் வேர்கள் ஆழமான படைகளிலுள்ள போஷணைகளை உறிஞ்சி, மேற்பரப்பிற்குக் கொண்டு வருவதனாலும், மண்வளம் அதிகரிக்கின்றது.

**மேட்டு நிலச் செய்கைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பயிர்ச்செய்கை**




மேட்டு நில பயிர்ச்செய்கைக்கான மாதிரி ஒன்று

வீதிமுறைப் பயிர்ச்செய்கையை மேலும் வேறுபாடுகளுக்குட்படுத்தி, இம்மாதிரித் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் தரையின் சரிவிற்குக் குறுக்காக, சமவுயரக் கோடு வழியே கிளிறிசிடியா அல்லது இப்பில் இப்பில் மரங்கள் வரிசையாக நடப்படும். இவ்வாறான இரண்டு வரிசைகளுக்கு இடையேயுள்ள தூரம் 4 மீற்றர்களாகும். இவற்றைத் தவிர, குறிப்பிட்ட தூரங்களுக்கு இடையில் ஒரு பட்டியாக புல் வர்க்கங்கள் வளர்க்கப்படும். இதனால் மண்ணரிப்புத் தடுக்கப்படுவதுடன், கால் நடைகளுக்கு உணவாகவும் பயன்படுகின்றது. நிலத்திலிருந்து அதிகூடிய பயனைப் பெறும் நோக்குடன், புல் வளர்க்கப்படும் பட்டியினுள் பழ மரங்கள் அல்லது முருங்கை மரங்கள் வளர்க்கப்படலாம். இதன்மூலம் விவசாயிகளுக்கு மேலதிக வருமானமும் கிடைக்கும். இவற்றைத்தவிர, சமவுயரக்கோடுகள் வழியே நடப்பட்டுள்ள கிளிறிசிடியா அல்லது இப்பில் இப்பில் மரங்களின் மூலம் மண் அரிமானம் தடுக்கப்படுகின்றது. இவ்வகை மாதிரியொன்றை உலர் வலய விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தலாம்.

**பாதுகாப்புப் பயிர்ச்செய்கையும் நெற்செய்கையும்**

பாதுகாப்புப் பயிர்ச்செய்கை முறை - நெற்செய்கையிலும் பயன்படுத்தப்படுகிறது. விசேடமாக தற்போது நெற்செய்கையில் பாவிக்கப்படும் இரசாயனப் பசளைகளின் அளவை, பசுந்தாட்பசளைப் பாவனையின் மூலம் குறைப்பதே, இதன் பிரதான நோக்கமாகும். வயலின் வரம்பில் வளர்க்கப்பட்ட இப்பில் இப்பில் மரங்களின் இலைகளை நெல் விதைக்கும் முன் வயலிற்கு பிரயோகிப்பதன் மூலம் (ஹெக்டயருக்கு 2 - 6 மெற்றிக் தொன் வீதம்) விளைவை, 74 சத வீதத்தினால் அதிகரிக்க முடியுமென்று ஆராய்ச்சிகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இது போன்று செஸ்பேனியா செஸ்பான் (Sesbania Sesban) என்னும் அவரையினப் பயிரை, வயலில் நெல் விதைக்கும் முன்னரே நடலாம். விவசாயிகள் இந்தப் பசுந்தாட்பசளையைப் பிரயோகிப்பதில் பல நன்மைகள் உண்டு. இரண்டு மாத காலத்தில் இந்தத் தாவரத்தை 0.25 மீற்றர் இடைவெளியில் நடும்பொழுது, ஒரு ஹெக்டயரில் இருந்து ஏறக்குறைய 4 மெற்றிக்தொன் (உலர் நிறை) நிறையுடைய இலைகளை உற்பத்தி செய்யலாம். இந்தத் தாவரத்தின் இலைகளைப் பிரயோகிப்பதன் மூலம், ஒரு ஹெக்டயருக்கு 130 கி.கி.நைதரசனை வழங்கமுடியுமென்று ஆராய்ச்சி மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது (தனிப்பட்ட தொடர்பு). போகத்திற்கு இடைப்பட்ட வயல் தரிசாக இருக்காது.

இந்த அவரை இனத்தை வளர்ப்பதனால், வயலில் களை கட்டுப்பாடு நிகழ்வதும் இதன் இன்னுமொரு நன்மையாகும். (முற்றும்)


**கலாநிதி வை. அருள்நந்தி**
தகவல் தொடர்பு மையம். (மாணவர் பகுதி)
விவசாயபீடம். யாழ். பல்கலைக்கழகம்.




## தொழில் வங்கி



| | |
|---|---|
| நிறுவனம் | உலக உணவுத் திட்டமும், புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சும் இணைந்து |
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | தொழில்நுட்ப அலுவலர்கள்<br>- யாழ்ப்பாணம்.<br>- திருகோணமலை.<br>- மட்டக்களப்பு.<br>- அம்பாறை.<br>- புத்தளம்.<br>- பொலனறுவை.<br>- அனுராதபுரம். |
| அடிப்படைத் தகுதி | ❖ க.பொ.த.உயர்தர சித்தி<br>❖ தேசிய தொழில்நுட்ப கற்கைநெறி சான்றிதழ் - குடிசார் பொறியியல்<br>அல்லது<br>தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் - குடிசார் பொறியியல்<br>அல்லது<br>உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்.<br>❖ 5 வருட அனுபவம்.<br>❖ ஆங்கிலப் பரிச்சயம்.<br>❖ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம். |
| விண்ணப்ப முடிவு திகதி | 18.09.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.



யாழ்.நகரில் காந்திகபே என்னும் பெயரில் 13 தொழிலாளர்களுடன் 1977 இலிருந்து சொந்தக்கடை நடத்திவந்து, குடாநாட்டு இடம்பெயர்வுடன் கடை சேதமடைந்துவிட தற்பொழுது, சுண்டுக்குளி - கொழும்புத்துறை வீதியில் வாடகைக் கடையில் யாழ்.உணவு ஆலை என்ற பெயரில் பால் உற்பத்திகளை சிறிய அளவில் மேற்கொண்டுவரும் திரு. இரட்ணம் அவர்களை நமது ஈழநாடு சார்பில் நேர்கண்ட போது......

# கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்ள வேண்டும்

**நீங்கள் இந்தத் தொழில் முயற்சியில் எப்படி ஈடுபட ஆரம்பித்தீர்கள் என்பது பற்றிக் கூறமுடியுமா?**

கைத்தொழில் ஒன்றினைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆவலினால், கொழும்புப் பகுதியிலுள்ள ஹொட்டேல் ஒன்றில் பணிபுரிந்து, ஐஸ்கீறீம் தயாரிப்புக்கான வேலை நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன். பின்னர், யாழ்ப்பாணத்தில் எனது சொந்த முயற்சியாகக் கடை ஒன்றை ஆரம்பித்தேன். தொடர்ந்து ஏற்பட்ட போர் அனர்த்தங்களினால், என்னுடைய கடை உடைந்துவிட்டது. பின்னர் தெரிந்தவர்கள் சிலரின் உதவியுடன், 1998 ஆம் ஆண்டளவில் இந்தக் கடையை ஆரம்பித்து நடத்தி வருகிறேன்.

காலையில் சிறிதுநேரம் எனது மகன் உதவிக்கு நிற்பார். அவர் பாடசாலைக்குச் சென்ற பின்னர், தனித்தே இந்தத் தொழிலைக் கவனித்து வருகிறேன். வேறு எவரையும் உதவிக்கு வைத்திருக்க முடியாதுள்ளது. அதில் சில இடர்பாடுகள் உண்டு. எத்தனை சிரமங்கள், கஷ்டங்கள் வந்தாலும், சுயமாகத் தொழிலில் ஈடுபடவே விரும்புகிறேன்.

நான் பிறரின் கீழ் பணிபுரிவதற்கு விரும்பவில்லை. ஏனெனில் எந்தத் தொழிலையும் கட்டுப்பாடுகள், கட்டாயங்களுக்கு மத்தியில் நின்று செய்யமுடியாது என்பதே எனது கொள்கையாகும். எலி வளையானாலும் தனிவளை வேண்டும் என்பார்கள். அதனாலேயே எவ்வளவோ பணக்கஷ்டங்கள் மத்தியிலும் சொந்த முயற்சியை நடத்தி வருகிறேன்.

தற்பொழுது எனது கடை அமைந்துள்ள கட்டடம், வாடகைக் கட்டடம். பிரச்சினைகளால் மூன்று தடவைகள் உடைந்து, திருத்தி வைத்துள்ளேன். அரசாங்கத்தினால் நிவாரண நிதி தருவார்கள் என்று எவ்வளவோ முயற்சிகள் எடுத்தேன். ஆனால், நிதி கிடைக்கவில்லை.

எனது சொந்தக் கட்டடம் என்றால், வங்கிக் கடன் எடுக்க முடியும். அதனைப் பயன்படுத்தி எனது வியாபார முயற்சியை மீண்டும் பெரிதாக ஆரம்பிக்கமுடியும். ஆனால், தற்பொழுது நாட்டு சூழ்நிலைகளின் தாற்பரியம் சரியாகத் தெரியாததால், நான் அந்த முயற்சியில் இறங்கவில்லை.

**எங்கிருந்து உங்களுக்குத் தேவையான பாலைப் பெற்றுக் கொள்கிறீர்கள்?**

திருநெல்வேலி பால்சாலையிலிருந்து எனக்குத் தேவையான பாலைக் காலையில் ஆறு மணிக்கும், பிற்பகல் மூன்று மணியளவிலும் அனுப்பி வைப்பார்கள். பத்து மணியளவில் தயிர் அனுப்புவார்கள். விற்பனை செய்ததுபோக, எஞ்சும் பாலை ஐஸ்கீறீம் , யோக்கட், சர்பத் போன்றவைகள் தயாரிக்கப் பயன்படுத்துகின்றேன். பாலை வருபவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சூடாகவோ, குளிராகவோ, கொக்கோ கலந்தோ வழங்குகிறேன்.

**தற்பொழுது உங்களுடைய தொழில்மூலம் கிடைக்கும் வருமானம் போதுமானதாக உள்ளதா?**

வேறுவழிகளில் எனக்கு வருமானம் இல்லை. இந்தத் தொழில்மூலம் கிடைக்கும் வருமானம், என்னுடைய குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாகவே உள்ளது. புகைப்பிடித்தல், வெற்றிலை போடுதல் போன்ற அநாவசிய செலவுகளை ஏற்படுத்தும் தீய பழக்கங்கள் என்னிடம் இல்லை. இதனால் பணத்தை சேமிக்க முடிகிறது.

இந்த இடத்தில் பால்சாலை ஒன்று இல்லாதபடியால்தான், நான் இந்தத் தொழிலை ஆரம்பித்தேன். அருகில் இரு பாடசாலைகள் இருந்தபோதிலும், மாணவர்கள் பாடசாலை உணவகத்தையே பாவிக்கிறார்கள். பாலின் விலை பால்சாலை நிர்ணயித்த விலைக்கே வழங்கவேண்டும். என்னுடைய தயாரிப்புக்களுக்கு ஓரளவு இலாபம் வைத்து விற்கிறேன்.

பெரியளவில் ஐஸ்கிறீம் தயாரிக்க முடியவில்லை. அதற்குரிய உபகரண வசதிகள், பாதுகாப்பு வசதிகள் என்னிடம் இல்லை. அத்துடன், அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு வருவதால், குளிர்சாதனப்பெட்டியில் வைக்க முடியாதுள்ளது. கடையில் குறைந்தளவு வாடிக்கையாளர்களுக்கு மட்டுந்தான் தயாரித்து வைத்திருக்கிறேன். யாராவது ஓடருக்குக் கேட்டாலும் செய்து கொடுக்கிறேன். பெரிய ஓடர் எடுக்க முடியாதுள்ளது. சம்பளம் கொடுத்து, உதவிக்கு ஆட்களை வைத்து ஓடர் எடுத்தாலும், எனக்கு இலாபம் குறைவாகவே கிடைக்கும். அதனால், நான் பெரிய ஓடர் எதுவும் எடுப்பதில்லை.

மின்சாரம், வாடகை கொடுத்ததுபோகக் கைக்காசு சரியாக இருக்கும். பால் காசை அன்றாடம் கொடுத்து விடுவேன். ஓரளவுக்கு எனது குடும்பச் செலவைச் சமாளிக்கக் கூடியதாகவுள்ளது. சிறியளவிலேயே என்னுடைய உற்பத்திகளை மேற்கொள்வதால், ஏ-9 பாதை திறப்பால் எனக்குப் பெரிய பாதிப்பில்லை.

**உங்களுடைய உற்பத்தியை மக்கள் மத்தியில் பிரசித்தப்படுத்த என்ன வழிமுறைகளைக் கையாளுகின்றீர்கள்?**

உண்மையாக, நான் எந்த வழிமுறைகளையும் பின்பற்ற விரும்பவில்லை. என்னுடைய உற்பத்திகள் சுத்தமானவை, தரமானவை. இங்குவரும் பொதுமக்களே என்னிடம் பலமுறை இதனைச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல உற்பத்திகளை நாடி, மக்களே வருவார்கள். அதற்கு விளம்பரம் தேவையில்லை என்றே நான் நினைக்கிறேன்.

அத்துடன், எங்கள் மக்கள் கொழும்பிலிருந்து வரும் ஐஸ்கிறீம்களையே அதிகம் வேண்டி அருந்துகிறார்கள். அழகான லேபல்களைக் கண்டும், விளம்பரங்களைக் கேட்டும் மயங்குவதால், தரத்தைப் பற்றி யோசிப்பதில்லை. குளிர்பானங்கள் தேவை என்று வருவார்கள். நான் அவற்றை விற்பதில்லை என்றவுடன் சென்றுவிடுவார்கள். அதனுடைய தீமைகள் அவர்களுக்கு விளங்குவதில்லை. பால், தயிரின் சத்துக்கள் பற்றி இந்தக் கால இளைஞர்கள் தெரியாமல் இருக்கின்றார்கள். இன்றைய உலகில் போலிக்கே கூடுதலான மரியாதையாகவுள்ளது.

**சுயதொழில் ஒன்றினை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

தொழிலில் நாணயம், தரம், சுத்தம் பேணப்படல் அவசியமாகும். நான் இதனையே கடைப்பிடிக்கிறேன். தரமற்ற உணவுகளை வழங்கினால், நாளைக்கு மக்கள் கடைப்பக்கம் வரமாட்டார்கள். மக்களை ஏமாற்றமுடியாது.

சில கடைகளின் முன்புறம் பார்த்தால், அழகாக இருக்கும். ஆனால், சமையல் நடைபெறும் பின்புறத்தைச் சுத்தமாகப் பேணமாட்டார்கள். மக்களும் இதனைக் கவனிப்பதில்லை.



ஒரு வாளிக்குள் நீரைவிட்டு வைத்து, பல கோப்பைகளை அதற்குள் வைத்துக் கழுவுவார்கள். எப்போதும் சுகாதாரம் பேணப்பட வேண்டும்.

அத்துடன், தொழிலில் அக்கறை தேவை. தற்பொழுது வெளிநாட்டுப் பணம் தாராளமாகக் கிடைப்பதால், அலட்சிய மனப்பான்மையுடன் இளைஞர்கள் நடந்துகொள்கிறார்கள். ஏதாவது கைத்தொழில் ஒன்றினைக் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும்.

*நேர்காணல்:*
*இரா.சுபோதினி, இ.சர்வேஸ்*

# இணையம் ஆளும் இன்றைய உலகம்

இணையம் பற்றி வேள்விப்படாத அல்லது பயன்படுத்தாத மனிதர்களே இல்லை என்னும் அளவிற்கு இணையம் உலகை ஆக்கிரமித்திருக்கிறது. தகவல் பரிமாற்ற தொழில்நுட்ப வரலாற்றில் இணைய அறிமுகமானது, ஒரு பெரிய திருப்புமுனை எனக் குறிப்பிடலாம். எல்லா வயதினருக்கும் ஏற்ற ஏராளமான தகவல்களைத் தன்னகத்தே கொண்ட இந்தத் தகவல் களஞ்சியத்தின் நன்மைகள் ஏராளம். மாணவர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான விடயங்களை வெகு எளிதாகப் பெறலாம். சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் வாசிக்கலாம். உலகின் மூலைமுடுக்குக்கெல்லாம் தொடர்பு கொள்ளலாம். மொத்தத்தில் இணையம் ஒரு பெரிய தனி உலகம் எனலாம்.


நாம் இணையம் பற்றிய ஏனைய விடயங்கள் பற்றி நோக்கு முன்பு - ஓர் இணைய முகவரிகளையும், அதன் அடிப்படைக் கட்டமைப்பினையும் விளங்கிக்கொள்ளல் அவசியமாகும். இதனடிப்படையில் பின்வரும் முகவரியினை நோக்குவோம்.

**http:\\www.lbm.com**

இங்கு **http (Hypertext transfer Protocoi)** என்பது, **www** உபயோகிக்கும் தகவல் பரிவர்த்தனை மொழியாகும். **www (World Wide Web)** என்பது உலக வலைய மையமாகும். இந்த இணையத் தொடர்பை வைத்திருக்கும் அனைவரும், தமக்குத் தெரிந்த விடயங்களை இந்த வலையமையத்தினூடாக மற்றவர்ளோடு பகிர்ந்துகொள்ளலாம்.

இந்த **www** இல் பெருந்தொகையான நல்ல விடயங்களும் உள்ளன. அத்துடன், தீயவிடயங்களும் உள்ளன. இந்த விடயங்களைப் பார்ப்பதற்கு **Browser** ஒன்றின் உதவி அவசியமாகிறது. **Browser** என்பது, ஒரு கணினி செய்நிரலாகும். பல வகையான இணைய உலாவிகள் **(Browser)** இன்று பாவனையில் உள்ளன. (உதாரணம் - **Netscape, Explorer**).

**IBM (ibm)** இது ஏதாவது ஒரு பெயராக இருக்கலாம். இங்கு, நாம் **IBM Company** ஐ உதாரணமாக எடுத்துள்ளோம். **Com:** இது **Domain** கணினியுடைய பெயராகும். **Domain computer** என்பது, தனக்குக் கீழ் பெரும் எண்ணிக்கையிலான கணினித் தொகுதி ஒன்றினைக் கொணடிருக்கும். இந்தக் கணினி ஒவ்வொன்றிலும் சேகரிக்கப்பட்டிருக்கும் இணையப் பக்கங்களைப் பற்றிய தகவல்களை இந்த **Domain** கணினியில் பதிவு செய்யப்பட்டிருக்கும். **www** இல் பல **Domain Computer** கள் உள்ளன. எல்லா **Website** களும், ஏதாவதொரு **Domain Computer** இல் பதிவு செயயப்பட்டிருக்கும்.



*(தொடரும்)*

**எஸ்.ஜெயானந்தன்**
**விரிவுரையாளர் (வருகை), யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி.**




| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 25/= | 30/= | 30/= | 25/= | 40/= |
| வெண்டிக்காய் | 15/= | 30/= | 20/= | 15/= | 25/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 70/= | 65/= | 70/= | 65/= |
| கத்தரிக்காய் | 60/= | 60/= | 70/= | 70/= | 80/= |
| பாகற்காய் | 40/= | 40/= | 40/= | 50/= | 40/= |
| கரட் | 30/= | 60/= | 60/= | 40/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 30/= | 25/= | 20/= | 25/= |
| முருங்கைக்காய் | 120/= | 60/= | 80/= | 80/= | 100/= |
| வெங்காயம் | 25/= | 30/= | 27/= | 30/= | 28/= |
| பச்சை மிளகாய் | 60/= | 60/= | 70/= | 45/= | 60/= |

# நமது ஈழநாடு

**சிந்தனைக்கு**

*இழைத்தது இகவாமைச் சாவரை யாரே*
*பிழைத்தது ஒறுக்கிற் பவர்.*

- திருக்குறள்

## நமது நோக்கு

# சமாதானத்திற்கான தடைகளை ரணில் இனம் காட்டவேண்டும்

"சமாதான பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கும் பட்சத்தில், அவை மிகக் கடினமானதாகவும், நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியவையாகவும் இருக்கும். இதன்போது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தடைகள் ஏற்பட்டாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை" இந்தக் கருத்தைக் கூறியிருப்பவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவேதான்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்தே இவ்வாறு அவர் கூறியிருந்தார். தற்போது தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென்றும், ஆனால் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று சரியாகக் கூறமுடியாதென்றும் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்புடன் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் எனத் தாம் நம்புவதாகவும் அங்கு கூறியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் கடுமையானதாகத்தான் இருக்கும். இது ஒன்றும் அதிசயமான விடயமேயல்ல. பிரச்சினை ஆழமானது மட்டுமல்ல சிக்கலானதும்கூட.

ஆகவே இரண்டொரு வாரங்களிலோ, மாதங்களிலோ பிரச்சினையைச் சிக்கலின்றித் தீர்த்துவிட முடியும் என எவரும் நம்பிவிட முடியாது. இந்தப் பிரச்சினையை ஆழமாக்கியவர்களே அதன் பள்ளத்தை நிரவிச் சமநிலைப்படுத்தவும் வேண்டும்.

இனப்பிரச்சினையை சிக்கலாக்கியவர்களே அந்தச் சிக்கலையும் களைய வேண்டியவர்களுமாவர்.

இந்தப் பொறுப்புக்குரியவர்கள் அரசாங்கத் தரப்பினரே. பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும்போது, அவை கடினமானதாகத்தான் இருக்கும் என - ரணில் கூறியிருப்பது பிரச்சினையின் கனதியை அவர் புரிந்து கொண்டிருப்பதையே உணர்த்துகிறது. ஆனால், அந்தக் கடினத்தன்மையை இலகுவாக்குவது அரசின் கையில் தான் உள்ளது என்பதை, அவர் புரிந்துகொள்ளவில்லைப் போல் தெரிகிறது.

இனி நடக்கக் கூடியதான பேச்சுவார்த்தைகள் பிரச்சினையைச் சந்திக்கவேண்டியதென்பது தவிர்க்க முடியாத அம்சமேயாகும்.

பிரச்சினைகளுக்குத்தான் தீர்வுகாண சமாதான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகிறதென்றால், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் அவற்றைத் தீர்ப்பது எப்படி? எல்லாப் பிரச்சினைகளும் - அவற்றிற்கான தீர்வுகளைக் காணும் முயற்சியில் புதிய பிரச்சினைகளைச் சந்திப்பதென்பது இயல்பான விடயமே. இந்த இயல்பு நிலையை எதிர்கொண்டு சமாளிக்கத் தெரியாவிட்டால் தீர்வொன்றை எட்டுதல் என்பது சாத்தியமில்லை.

பேச்சுவார்த்தைகளின் போது, மீண்டும் தடைகள் ஏற்படக்கூடும் என்றும் ரணில் கூறியுள்ளமையைப் பார்த்தால், அவர் சில தடைகள் குறித்து ஏற்கனவே தெரிந்து கொண்டிருப்பார் போல் தெரிகிறது.

சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் விடுதலைப் புலிகள் தரப்பினர் தாம் உறுதியாகச் செயற்படுவதாக, பல தடவைகள் வெளிப்படையாகவே விளக்கியுள்ள நிலையில் அவர்கள் எந்தத்தடையையும் எதிர்கொள்ளத் தயாராவே உள்ளனர் என்பது தெளிவாகிறது. இந்த நிலையில், அரச தரப்பினர் தடைகளைப் போடாத வரையில் சமாதானமும் அமைதிப்பேச்சுக்களும் தொடர்வது சாத்தியமே.

அரசதரப்பினர் தாம் தடையாக எதையும் மேற்கொள்ளாது விட்டால், பேச்சுக்களுக்குத் தடையாக, முட்டுக்கட்டையாக இருக்கும் என ரணில் அஞ்சும் சக்திகள் எவை அல்லது பிரச்சினைகள் எவை என்பதை வெளிப்படையாக அவரே கூறுவதுதான் நல்லது. அவசியனமானதும் கூட.

அப்போது தான் தடைகள் எந்தவகையில் - யாரால் ஏற்படுத்தப்படும் என்பதை சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகமும், ஏற்பாட்டாளர்களும், சமாதான நடவடிக்கைகளில் பங்காளிகளான விடுதலைப் புலிகளும் அறிந்துகொண்டு தடைகளைத் தகர்த்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் நகர்வுகளை மேற்கொள்ளமுடியும்.

எப்பொழுதுமே பாதிக்கப்பட்டவர்களுக்கும், நியாயத்திற்காகப் போராடி உரிமைகோரி வலியுறுத்தி நிற்பவர்களுக்கும்தான், சமாதானத்தின் பெறுபேறுகள் கிட்டவேண்டும்.

இதனை உறுதிசெய்யாத எந்த சமாதானமும் அர்த்தமற்றதேயாகும். எனவே சமாதானத்திற்கான தடைகளை பேச்சுகளின் முன்னர் இனங்காட்டுவதன் மூலமே ரணில் - சர்வதேச சமூகத்திற்கு அமைதித்தீர்வின் மீது அரசுக்குள்ள அக்கறையை நிரூபிக்க முடியும்.

அதைவிடுத்து, விடுதலைப்புலிகள் விட்டுக்கொடுப்பார்களா? விட்டுக்கொடுப்புக்களைச் செய்து பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என்று கேட்பது நியாயமற்ற ஒன்றாகும்.

தமிழ் மக்கள் இழப்பதற்கும், விட்டுக்கொடுப்பதற்கும் எதுவுமில்லை என்ற நிலையில்தான் - வெல்வதற்கு தமது மண்ணும், உரிமைகளும் வேண்டும் என்று உறுதியுடன் போராடத் தொடங்கினர்.

இனிமேலும், அவர்களை விட்டுக்கொடுங்கள் என்று கேட்பது நியாயமற்ற - சமாதான நோக்கினை அர்த்தமற்றதாக்கும் கோரிக்கையாகவே கருதப்படும்.

சமாதான நகர்வுகளுக்கான எதிர்ப்புகளும், அமைதித் தீர்வை எட்டும் முயற்சிகளை முறியடிப்பதற்கான தடைகளும் தென்பகுதி இனவாதிகளிமிருந்தே உருவாகிறது என்பதை ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்வதும், அவற்றை நீக்க முயற்சிகளை மேற்கொள்வதும் தான் இன்றைய தேவையாகும்.

சமாதானத்தின் மீதான நம்பிக்கையை மக்களுக்கு இல்லாமல் செய்யும் அறிக்கைகளோ, கருத்துக்களோ தீர்வின் மீதான அரசின் உறுதியின்மையை புலப்படுத்துவதாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்




'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி'

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதில் சிக்கல்கள்!

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகிறபோதும், அவர்களை நிரந்தர நியமனம் செய்வதில் சிரமங்கள் உள்ளதாக - கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக, மூவாயிரம் ஆசிரியர்களுக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்க அனுமதித்துள்ளதாகவும், இவர்களில் தொண்டர் ஆசிரியர் ஆயிரம் பேருக்கும், க.பொ.த உ/த பரீட்சையில் சித்தியெய்திய ஆயிரம் பேருக்கும், பட்டதாரிகள் ஆயிரம் பேருக்குமென நியமனங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதென தெரிவித்தார்.

இதன்போது, வடக்கு - கிழக்கிலிருந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும், இந்த தெரிவுக்குள் உள்ளடக்கி இருக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். எனினும் புதிதாக இவர்களுக்கு நியமனம் வழங்கக்கூடிய நிலையில் கல்வி அமைச்சு இல்லை. இதேவேளை, வடக்கு - கிழக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பிரச்சினை மிக அண்மைக்காலத்திலேயே ஏற்பட்டுள்ளது என, வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் - ரி.தியாகலிங்கம் தெரிவித்தார். நிரந்தர நியமனம் வழங்க அனுமதிக்கப்பட்டிருந்த மூவாயிரம் பேரில், அடங்கும் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களுக்கு 1998 ஆம் ஆண்டு முதல் சேவையிலிருந்து வந்த தொண்டர் ஆசிரியர்களே - வெற்றிடங்களுக்காக நிரப்பப்பட்டனர். அன்றைய சூழ்நிலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக, ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிந்து வரும் இவர்கள், தற்போது நிரந்தர நியமனம் கோரி வருவதாக அவர் தெரிவித்தார். இதற்கமைய இவர்களது கோரிக்கைகளை தாம் கல்வியமைச்சிற்கு அறிவித்துள்ளதாகவும் அவர் இதனை புதிய பிரச்சினையாக கையாண்டு தீர்ப்பார் என எதிர்பார்ப்பதாகவும், மேலும் அவர் தெரிவித்தார்.

# விடுவிக்கப்பட்ட படகுகள் திருமலை வந்து சேர்ந்தன

தமிழகத்தின் நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட 53 மீன்பிடிப் படகுகள் நேற்றுக்காலை திருமலைத் துறைமுகத்தை வந்தடைந்தன. 12 மீன்பிடி இழுவைப் படகுகளைக் கொண்ட இந்தப் படகுகளுடன் 53 திருமலையைச் சேர்ந்த மீனவர்களையும், இந்திய மாலுமிகள் அழைத்து வந்துள்ளனர்.

இவ்வாறு வந்த மீனவர்கள் அனைவரையும் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளினால், அங்கப் பரிசோதனை முடிவடைந்ததும், அவர்களின் இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களை அழைத்துவந்த 72 இந்திய மாலுமிகளை 48 மணிநேரம் திருமலைத் துறைமுகத்தில் தங்கி இளைப்பாற அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை - இந்திய - இலங்கை எல்லைக் கடலோரத்தில் வீசிய கடும் காற்றினால் மூன்று படகுகள் பிணைப்பை அறுத்துச் சென்றுள்ளது. மற்றுமொரு படகு கோணேச்சரக் கடற் பகுதியிலும் அறுத்துச் சென்றுள்ளது.

திருகோணமலை படகு உரிமையாளர் சங்கத் தலைவர் சித்திரசேகரம் இந்தப் படகுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியைக் கோரப்போவதாக தெரிவித்தார்.

# தொல்லியல் ஆய்வுக்கென அரச அதிபர் நிதி ஒதுக்கீடு

கலாநிதி புஷ்பரட்ணம் தலைமையில் - யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மற்றும் வரலாற்றுத்துறை மாணவர்கள் ஒன்றிணைந்து, கிளிநொச்சி பிராந்தியத்திலும், நெடுந்தீவிலும் தொல்லியல் ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் வெட்டுக்காடு, மண்ணித்தலை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் போது, பண்டைய தமிழ் எழுத்துப் பொறித்த பெருமளவு மட்பாண்டங்களையும், நாணயங்களையும், அரிய பல தொன்மைச் சான்றுகளையும் கண்டுபிடித்தனர். இத்தகைய ஆய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு நிதி ஒரு தடையாக இருப்பதாக, அரச அதிபருக்கு எடுத்துக்கூறியதன் அடிப்படையில் - அரச அதிபர் சி.பத்மநாதன் தமிழரின் பாரம்பரிய வரலாற்றுப் பெருமையை எடுத்துக் காட்டும் இதுபோன்ற தொல்லியல் ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்காக, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து முதற்கட்டமாக 75,000 ரூபா ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

(62)

## மேல் மாகாணசபை தேர்தலில்

# பொதுஜன ஐக்கிய முன்னணியினர் பொதுப்பட்டியலில் போட்டியிட முடிவு

(கொழும்பு)

மேல் மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுப்பட்டியலில் போட்டியிடுவதென்று தீர்மானித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் குணவர்த்தன, மேல் மாகாணசபை ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் மேல் மாகாணசபை அங்கத்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதன்போதே, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மாகாணசபைக்கு வழங்கவேண்டிய நிதிகள் மாகாணசபைக்கு உரிய காலத்தில் வழங்குவதில்லை என்றும், ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் அனுமதி வழங்காததனால், வேலைப்பளு அதிகரித்துள்ளதாக மாகாணசபை அங்கத்தவர்களின் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள்.

மாகாணசபைகளின் கால எல்லை அடுத்த வாரம் முடிவுறும் என்பதால், பொதுத் தேர்தல் பெப்ரவரி மாதத்தில் நடைபெறும். அதற்கான பொதுத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என்று அனுரா பண்டாரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டன.

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு - ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

## பொது உளச்சார்பு

**நேரம் :1 மணித்தியாலம்**

**ஒன்றல்ல இரு தடவைகள் பரீட்சை பிற்போட்டதால், ஓர் சலிப்பு. வினாத்தாளை எதிர்கொள்ளப் பரீட்சார்த்திகள் அவாவாக இருந்தாலும், வினாத்தாள் எவ்வாறமையும் என்பதில் ஓர் குழப்பம். 28 ஓகஸ்டில் வெளியான மாதிரி வினாத்தாளைவிட, சற்று வேறுபட்ட கோணத்தில் இவ்வினாத்தாள். "கூடிய பயிற்சி சிறந்த பெறுபேறு".**

**♦ 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. இந்த அட்டவணையின் முதல் மூன்று நிரல்களிலுமுள்ள சொற்கள் - ஒலியியைபுபடுகின்றன (Rhyme). அட்டவணையிலுள்ள எந்தச் சொல்லும் நான்கிற்கு மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்டிருப்பதில்லை. நிரல் S ஐத் தவிர, மற்றைய நிரல்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஒவ்வொரு சொல்லும் வெவ்வேறு எழுத்துக்களுடன் ஆரம்பிக்கின்றன. ஒவ்வொரு நிரல் தொடர்பாகவும் பின்பற்றப்படும் வேறு விதிகள் இருப்பின், அவற்றையும் கருத்திற்கொள்க. இதற்கேற்ப பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

| | P | Q | R | S |
|---|---|---|---|---|
| A | பந்து | நட்டம் | சாரம் | அகத்தி |
| B | கந்து | கட்டம் | தாரம் | அகழி |
| C | சந்து | மட்டம் | வாரம் | அகவும் |
| D | வந்து | பட்டம் | பாரம் | அகரம் |
| E | தந்து | தட்டம் | காரம் | அகல் |

**(1)** நிரல் Q வில் சேர்க்கமுடியாத சொல்
(1) சட்டம் (2) வட்டம்
(3) அட்டம் (4) பதட்டம்

**(2)** நிரல் S இல் சேர்க்கமுடியாத சொல்
(1) அகலம் (2) அகடு
(3) அகாலம் (4) அகழ்

**(3)** நிரல் P இல் சேர்க்கமுடியாத சொல்
(1) அந்து (2) மந்து
(3) ஐந்து (4) ஐந்து

**(4)** பின்வருவற்றில் எது நிரல் E இல் இருக்கத்தக்கது?
(1) அசந்து, சட்டம், ஆரம், அகம்பு.
(2) திருந்து, விட்டம், ஈரம், அகம்.
(3) பந்தம், அசடம், அவதாரம், அகலியம்.
(4) பந்துரம், அவிட்டம், அபாரம், அகத்தியம்.

**(5)** பின்வரும் எந்த இரு சொற்களை இடைமாற்றலாம்.
(1) (CG), (CR) (2) (DR),(DS)
(3) (BP), (DP) (4) (EQ), (ES)

**☆ ஊழியர்களை ஆட்சேர்க்கும் பரீட்சைக்குத் தோற்றும் A,B,C,D,E,F,G,H என்னும் எட்டுப் பரீட்சார்த்திகள் - உளச்சார்பு வினாத்தாளில் புள்ளிகளைப் பெற்றுள்ளவிதம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக.**

பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகளுக்கு ஏற்ப, கூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் மேலேயும், குறைந்த புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் கீழேயும் இருக்குமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளனர்.
✪ H என்பவர் D இலும் பார்க்கக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளபோதிலும், C இலும் பார்க்க முதலாமிடம் கீழே இருக்கின்றார்.
✪ D இற்கும், C இற்கும் இடையே நான்கு பரீட்சார்த்திகள் உள்ளனர்.
✪ A பெற்ற புள்ளிகள் B இன் புள்ளிகளிலும் பார்க்கக் குறைந்ததும், C இன் புள்ளிகளிலும் பார்க்கக் கூடியதுமாகும்.
✪ E,F,G ஆகியோரிடையே ஆகவும்கூடிய புள்ளிகளைப் பெற்றவர் G உம, ஆகவும் குறைநத புள்ளிகளைப் பெற்றவர் E உம் ஆவார்.

**(6)** ஆகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர் யார்?
**(7)** புள்ளிகள் ஒழுங்குபடுத்தப்படும்போது, A இற்குரிய இலக்கம் யாது?
**(8)** 3 ஆம் இடத்தில் இருக்கும் பரீட்சார்த்தி யார்?
**(9)** ஆகவும் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார?
**(10)** 7 ஆம் இடத்தில் இருக்கும் பரீட்சார்த்தி யார்?

**☆ ஐந்து ஆங்கிலச் சொற்களின் எழுத்துக்களுக்கு எண் பெறுமானங்களை அளித்து, அவற்றின் கூட்டுத்தொகையை எடுக்கும்போது, ஒவ்வொரு சொல்லுக்கும் கிடைக்கும் பெறுமானம் எதிரே தரப்பட்டுள்ளது.**

FOR - 42 RACE - 81
AIR - 52 FORCE - 88
OFFICE - 118

**இதற்கேற்ப 11 தொடக்கம் 12 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

**(11)** C,E என்பவற்றின் பெறுமானங்களின் கூட்டுத்தொகை யாது?
**(12)** I இன் பெறுமானம் யாது?

☆ 13 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நிகழ்ச்சியும், அது தொடர்பான A,B,C,D,E என்னும் ஐந்து படிமுறைகளும் தரப்பட்டுள்ளன. இப்படிமுறைகள் திருத்தமான ஒழுங்கில் அமையவில்லை. படிமுறைகளின் திருத்தமான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிந்தெடுக்க.

**(13)** நிகழ்ச்சி: அரசாங்க அலுவலகம் ஒன்றில் தொலைபேசி ஒலிக்கின்றது.
**A:** பொதுமக்கள் தொடர்பு அலுவலர் தொலைபேசியை கையில் எடுக்கிறார்.
**B:** அழைப்பவரின் தேவையைப் பூர்த்தி செய்கிறார்.
**C:** உரிய அரச கருமத்திற்குப் பொறுப்பான அலுவலிடம் தொலைபேசியைக் கொடுக்கிறார்.
**D:** தம்மையும், நிறுவனத்தையும் அறிமுகம் செய்து, அழைப்பவரிடம் யாரென விசாரிக்கின்றார்.
**E:** அழைப்பவரின் அரச கருமத் தேவைபற்றி விசாரிக்கின்றார்.
(1) A,B,C,D,E (2) A,D,E,C,B
(3) A,E,C,D,B (4) B,C,E,A,D

**(14)** நிகழ்ச்சி: எழுதுநர் ஒருவர் சொந்த விடுதலைக்கு விண்ணப்பிக்கிறார்.
**A:** விடுதலைக்கு விண்ணப்பிப்பவர் தனக்குப் பதிலாகப் பணியாற்றுவதற்கு உடன்பட்டவரிடமிருந்து கையொப்பத்தைப் பெற்றுக் கொள்கிறார்.
**B:** விடுதலை விண்ணப்பப்படிவத்தை நிரப்பத் தொடங்குகிறார்.
**C:** விடுதலை எழுதுநர் பதிவேட்டில் பதிவு செய்கிறார்.
**D:** விடுதலைக்கு அங்கீகாரத்தைப் பெறுகிறார்.
**E:** மேற்பார்வை அலுவலர் விதந்துரைக்கிறார்.
(1) A,E,C,B,D (2) B,A,E,D,C
(3) B,C,E,A,D (4) C,D,A,E,B

**(15)** நிகழ்ச்சி: தொழிலற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றது.
A: பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குதல் தொடர்பாக, அரசாங்கத்திற்கும் பொறுப்பு உண்டு. ஆகையால், இச்செயன்முறை பின்பற்றப்படுகிறது.
**B:** தொழிலற்ற 6000 பட்டதாரிகள் இதுவரைக்கும் தொழிற்பயிற்சி அமைச்சில் பதிவு செய்துள்ளனர்.
**C:** பதிவுசெய்த 1600 பட்டதாரிகளுக்கு இதுவரையும் பதிவு எண்ணைக் குறிப்பிட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
**D:** பதிவுசெய்த பட்டதாரிகளுக்கு மாத்திரம் இனிமேல் தொழில் வழங்கப்படும்.
**E:** விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை, இம்மாதம் 30 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.
(1) B,C,E,D,A (2) B,D,C,E,A
(3) D,C,E,A,B (4) E,B,C,A,D

**☆ 16 தொடக்கம் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் X,Y என்னும் இரு கூற்றுக்கள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய, ஒவ்வொரு வினாவுக்கும் A,B,C,D,E என்னும் எழுத்துக்களில் உரிய எழுத்தைத் தெரிவுசெய்க.**
✪ x,y ஆகியன உண்மையாகவும், y ஆனது x ஐ விளக்குவதாகவும் இருப்பின், எழுத்து A யையும்
✪ x,y ஆகியன உண்மையாகவும், y ஆனது x ஐ விளக்காததாகவும் இருப்பின், எழுத்து B யையும்
✪ x உண்மையாகவும், y பொய்யாகவும் இருப்பின், எழுத்து c யையும்
✪ x பொய்யாகவும், y உண்மையாகவும் இருப்பின், எழுத்து D யையும்
✪ x,y ஆகியன பொய்யாக இருப்பின், எழுத்து E யையும்


**(16) X:** இலங்கையில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துக்கொண்டு வருகிறது.
**Y:** சில சாரதிகள் சட்டங்களுக்கு மதிப்பளித்து வாகனங்களைச் செலுத்துவதில்லை.
(1) A (2) B (3) C (4) D (5) E

**(17) A:** சட்டவிரோதமான முறைகளில் மீன்பிடித்தல், இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் மீன்வளம் குறைவதற்கும் காரணமாகும்.
**Y:** கடற்கரை அரிப்பைத் தவிர்ப்பதற்கு கல்வேலி அமைக்கப்பட்டிருப்பதனால், பெரும்பாலான மீனவர்கள் சட்டவிரோதமான முறைகளில் மீன்பிடிக்கத் தூண்டப்படுகின்றனர்.
(1) **A** (2) **B** (3) **C** (4) **D** (5) **E**

**(18) X:** எழுதுநர்கள் திறமையான கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஆவார்.
**Y:** எல்லா ஆட்டக்காரர்களும் எழுதுநர்களாவர்.
(1) **A** (2) **B** (3) **C** (4) **D** (5) **E**


**பின்வரும் கோலங்களை அவதானித்து, வெற்றிடங்களில் "-?-" வரவேண்டிய எண்களைத் தருக.**

**(19)**




(1) 30 (2) 18 (3) 17 (4) 15

**(20)**





(1) 97
(2) 53
(3) 401
(4) 96

**☆ 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றைப் பயன்படுத்திச் சரியான விடையைத் தருக.**

A,B,C,D,E,F என்ற நண்பர்களைக் கொண்ட குழு ஒன்று சுற்றுலா செல்கின்றது. இக்குழுவில் மூன்று எழுதுநர்கள், ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர், ஓர் இசைக்கலைஞர், ஒரு வணிகர் ஆகியோர் உள்ளனர். இவர்களில் இரு பெண்களும், திருமணஞ்செய்த இரு தம்பதிகளும் உள்ளனர். F என்பவர் ஓய்வுபெற்ற அதிபராவார். திருமணம் செய்த மகன் C உடன் அவர் வாழ்கின்றார். D என்பவர் எழுதுநராவார். அவருடைய கணவர் தமது தந்தையாரைக் கவனித்துக்கொள்கிறார். A தனது வர்த்தக நோக்கங்களுக்கும், தமது மனைவியைத் தினமும் அலுவலகத்திற்குக் கொண்டு செல்வதற்கும் பயன்படுத்துவதும், A இற்குச் சொந்தமானதுமான வானில் இக்குழு செல்கிறது. E என்பவர் - A இன் மனைவி பணியாற்றும் அதே அலுவலகத்தில் பணியாற்றுகின்றார்.

**(21)** இக்குழுவில் இசைக் கலைஞர் யார்?
**(22)** A இன் மனைவி யார்?
**(23)** இக்குழுவில் எழுதுநர்கள் யார்?
**(24)** திருமணஞ்செய்யாத எழுதுநர் யார்?
**(25)** இக்குழுவில் இரு தம்பதிகளும் யாவர்?

**☆ 26 தொடக்கள் 28 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டவை. வரைபடத்தில் இருக்கும் வட்டத்திலும், சதுரத்திலும் தரப்பட்டுள்ள பரிமாணங்களை விளங்கிக்கொண்டு விடை தருக.**





14 cm

வட்டத்தின் பரப்பளவு $\pi r^2$


**(26)** பகுதி A இன் பரப்பளவு யாது?
**(27)** பகுதி B இன் பரப்பளவு யாது?
**(28)** பகுதி C இன் பரப்பளவு யாது?

**(29)** அருகே தரப்பட்டுள்ள வரைபில் எத்தனை சதுரங்கள் உள்ளன?




(......................)

**(30)** கீழே தரப்பட்டுள்ள ஐந்து உருவங்களில் வித்தியாசமான உருவின் கீழ் கீறிடுக.




**(30)** கீழே தரப்பட்டுள்ளவற்றில் உருவம் I ஆனது, உருவம் II உடன் பொருந்துகின்றது. இதற்கிணங்க உருவம் III இற்கு, எதிரிலுள்ள 1,2,3,4 ஆகியவற்றிலிருந்து எந்த உருவம் பொருந்தக்கூடியது என்பதைத் தருக.




**(32)** வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தருக.
196 (25) 324
329 ( ) 137
(1) 30 (2) 26 (3) 50 (4) 25

**(33)** ஒரு சோடி சப்பாத்தின் எடை 0.5 Kg. தோல் பை ஒன்றின் எடை 3.5Kg. ஒரு பெட்டியில் 6 சோடி சப்பாத்துக்களும், மற்றொரு பெட்டியில் 4 தோல் பைகளும் பொதிசெய்யப்படுகின்றன. சப்பாத்துக்கள் பொதிசெய்யப்பட்ட 20 பெட்டிகளும், பைகள் பொதிசெய்யப்பட்ட 15 பெட்டிகளும் ஒரு வாகனத்தில் ஏற்பட்டது. அவற்றின் தேறிய எடை என்ன?

**(34)** மணித்தியாலத்திற்கு 40Km கதியில் செல்லும் வாகனமொன்று, 1L பெற்றோலில் 20Km பயணம் செய்கிறது. மணித்தியாலத்திற்கு 50Km கதியில் பயணம் செய்கையில், அது 1L இற்குப் பயணம் செய்கின்ற தூரத்தில் 10% குறைகின்றது. 11L பெற்றோலைப் பயன்படுத்தி, இந்த வாகனத்தில் 50Km கதியில் எத்தனை Km தூரம் செல்லலாம்?

**(35)** குறித்த ஒரு தூரத்தில் 55% மக்கள் மோட்டார்க்கார் உரிமையாளராவர். 30% மக்கள் மோட்டார்வான் வாகன உரிமையாளராவர். 15% மக்கள் மோட்டார்க்கார், மோட்டார் வான் வாகனம் ஆகிய இரண்டினதும் உரிமையாளராவர். மோட்டார்க்காரினையோ, மோட்டார்வான் வாகனத்தையோ, தமது உரிமையாகக் கொண்டிராத பிரஜைகளின் சதவீதம் யாது?

**(36)** ஒரு வியாபார நிறுவனத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறு வரிசையில் வைத்துச் சவர்க்காரம் வழங்கப்பட்டது. இரு ஆண்களுக்கு வழங்கப்பட்டதும், ஒரு பெணணுக்கு என்ற ஒழுங்கின் பிரகாரம் வரிசையில் நிற்போர்க்கு மட்டும் சவர்க்காரம் வழங்கும்முறை மேற்கொள்ளப்பட்டது. ஒரு நபருக்குச் சவர்க்காரம் வழங்கச் சரியாக 2 நிமிடம் எடுத்தது. மு.ப. 8 மணிக்குப் பெண்கள் வரிசையில் நின்ற முதலாவது நபர் சவர்க்காரம் பெறும்முறை வந்ததெனில், ஆண்கள் வரிசையின் தொடக்கத்திலிருந்து ஐந்தாவது நபர் சவர்க்காரத்தை எத்தனை மணிக்குப் பெறுவார்?

**(37)** 1Kg ரூபா 57 கிரயமுடைய தேயிலைத் தூளையும், 1Kg ரூபா 52 கிரயமுடைய தேயிலைத் தூளையும் ஒரு வியாபாரி கலப்பதற்கு முடிவுசெய்தார். இவ்வாறு கலக்கப்பட்ட 1Kg தேயிலைத்தூளின் கிரயம் ரூபா 55 ஆகும். இரு வகையான தேயிலைத்தூள்களையும் அவர் என்ன விகிதத்தில் கலந்தார்.

☆ 38 ஆம் வினாவில் மூன்று கூற்றுக்களைக் கொண்ட ஐந்து சிறிய பந்திகள் உள்ளன. ஒரு பந்தியிலுள்ள மூன்று கூற்றுக்கள் ஒரு தர்க்கரீதியான தொடர்பைக் காட்டுகின்றன. தர்க்கரீதியான தொடர்பைக் காட்டும் பந்தியைத் தருக?

**(38)**
(1) நாம் நேற்றுச் சடுதியாக நோயுற்றேன். நான் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். நேற்று விடுமுறைதினம்.
(2) நான் நேற்றுச் சடுதியாக நோயுற்றேன். எனது உறவினர்கள் மிகவும் கவலையுற்றனர். நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை.
(3) நான் நேற்றுச் சடுதியாக நோயுற்றேன். முந்தநாள் இரவு வீட்டிலன்றி, வெளியே சாப்பிட்டேன். அதுவே எனது நோய்க்குக் காரணமாக இருக்கலாம்.
(4) நான் நேற்றுச் சடுதியாக நோயுற்றேன். நான் நோயுற்ற முதற்சந்தர்ப்பம் இதுவன்று. நான் ஒழுங்காக மருந்தெடுத்துக் கொண்டிருந்தேன்.
(5) நான் நேற்றுச் சடுதியாக நோயுற்றேன். நான் மருத்துவரைப் பார்க்கச் சென்றேன். மருத்துவர்களுக்கு வேலைகள் அதிகம் உண்டு.

**P. உமாசங்கர் Bcom. spl .Tr .com**
**ஆசிரியர்**
**பொது அறிவு நுண்ணறிவுத்துறை.**

# ஈராக்கில் தற்கொலை குண்டுத் தாக்குதல்; 5 வயது குழந்தை பலி; 50 பேர்வரை காயம்!

(பக்தாத்)

ஈராக்கின் தென்பகுதி நகரான ஆர்பிலில், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் குண்டுத் தாக்குதல் ஒன்றில் 5 வயதுக் குழந்தை ஒன்று உயிழந்தது. மேலும் 50 பேர்வரை காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய வரும் உயிரிழந்தார்.

வாகனமொன்றில் வந்த குண்டுதாரியே இந்த தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய வாரங்களில் தொடரும் 5 ஆவது குண்டுத் தாக்குதல் இதுவாகும். குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் அமெரிக்க புலனாய்வு அதிகாரியின் வீடு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்நியநாட்டு அமைப்புக்களுக்கெதிராகவும், அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படையுடன் தொடர்புடைய உள்ளூர் அமைப்புக்களுக்கெதிராகவும் மேற்கொள்ளப்படும் கார்க்குண்டுவெடிப்புக்கள் அண்மைக்காலமாக ஈராக்கில் அதிகரித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 'கமாஸ்' இயக்கத் தலைவர் மீது இஸ்ரேல் நேற்று வான் தாக்குதல்!



காஸாவில் நேற்று கமாஸ் இயக்கத் தலைவரை நோக்கி நடத்தப்பட்ட வான் தாக்குதலில் கமாஸ் தலைவர் சிறு காயங்களுடன் தப்பித்துக் கொண்டார். அவரது மகனும் மெய்க்காவலரும் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் மொஹமட் அல் சகார் என அழைக்கப்படும் இஸ்லாமிய தீவிரவாத இயக்க ஸ்தாபகரின் இல்லம் தரைமட்டமானது. தாக்குதலில் அவரது மனைவி படுகாயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலின் பின் கமாஸ் இயக்கத்தின் ஆதரவாளர்கள் ஒன்றுகூடி, இஸ்ரேலுக்கெதிராக கோஷமிட்டதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக நோக்கு

### மன்னர் நாகேந்திராவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் நேபாளத்தில் கைதாகினர்!



நோபாள மன்னர் நாகேந்திராவிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஐவரும் அடங்குவர்.

மாவோ தீவிரவாதிகளுடன் நடத்திய பேச்சுகள் தோல்வியடைந்ததால், பொதுமக்கள் ஒன்றுகூடுவது சென்ற வாரம் முதல் தடைசெய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டிருந்தனர்.

இதில், முன்னாள் பிரதமர் கிரியா பிரசாட் கொய்ராலாவும் பங்குபற்றியிருந்தார்.

கடந்த ஒக்ரோபரில், அரசைக் கலைத்தபின்னர், முழுப் பொறுப்புக்களையும் மன்னர் நாகேந்திரா ஏற்றுக்கொண்டிருந்தார்.

நாடாளுமன்றம் மீண்டும் செயற்படுவதற்கு வழிசெய்யப்படவேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டிருந்தனர்.

## லைபீரியாவின் ககரா நகரில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்ததாக சமாதானப் படை அறிவிப்பு!




லைபீரியாவின் ககரா நகரில், போராளிகளுக்கும் அரச படையினருக்குமிடையே இடம்பெற்ற போர், கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக, தென்னாபிரிக்க சமாதானப் படையினர் தெரிவித்தனர்.

தலைநகர் மொன்ரோவியாவிற்கு வெளியே முதல் முறையாக சமாதானப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சமாதான படையினர் ககராவை அடைந்ததும் போரில் ஈடுபட்டிருந்த இரு பகுதியினரையும் அந்த இடத்திலிருந்து அகற்றியுள்ளனர். சண்டை நடைபெறும் இடத்திற்கு, ஒரு மாதத்திற்கு முன்னரேயே சமாதானப் படையினர் சென்றிருந்தனர்.

சமாதானப் படையினரை கிராமப் பகுதிகளுக்கு அனுப்புவதை சர்வதேச உதவி நிறுவனங்களும், நகர்ப்புறங்களில் வாழும் மக்களும் அதிகம் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச படைகளுக்கும், போராளிகளுக்கும் இடையே நடைபெறும் போரால் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

600 சமாதானப் படையினரை லைபீரியாவின் ஒரு பகுதியில் கடமைக்கு அமர்த்துவதன் மூலம் லைபீரிய மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பிடம், மருத்துவ வசதிகள் இல்லாது கஷ்டப்படுகின்றனர் என பி.பி.சி நிருபர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அரசாங்கமும், போராளிக் குழுக்களும் ஓகஸ்ட் 18 இல் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை, இரு தரப்பினரும் மீறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒக்ரோபர் 14 இல் அரசிற்கும் போராளிகளுக்கும் இடையே அதிகாரப்பகிர்வுள்ள அரசை உருவாக்கி 2005 இல் ஜனநாயக அரசொன்றை உருவாக்குதவதென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை - ஐக்கியநாடுகள் சபை 15,000 இற்கு அதிகமான சமாதானப் படையினரை லைபீரியாவிற்கு அனுப்புவதெனத் தீர்மானித்துள்ளது. அதிகூடிய சமாதானப் படையினர் ஒரு நாட்டிற்கு அனுப்பப்படவுள்ளமை உலகில் இதுவே முதல்தடவை.

## ஆப்கானிஸ்தானில் சேவையிலீடுபட்டிருந்த தொண்டர் அமைப்பைச் சேர்ந்த நால்வர் தலிபான்களின் தாக்குதலில் உயிரிழப்பு!

ஆப்கானில் பணிபுரிந்த டென்மார்க் தொண்டர் அமைப்பைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் தலிபான் போராளிகளின் தாக்குதலில் உயிரிழந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காபூலின் தென்பகுதி மாகாணமான காஷ்னியின் ஊடாக தொண்டர் உறுப்பினர்கள் பயணம் செய்துகொண்டிருந்தபோது, அவர்கள் பயணம்செய்த வண்டி தடுத்துநிறுத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் நால்வர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் சிறு காயங்களுடன் தப்பிக் கொண்டதாகவும் அந்த தொண்டர் அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டென்மார்க்கைச் சேர்ந்த இந்தத் தொண்டு ஸ்தாபனம் 1988 ஆம் ஆண்டில் இருந்து நீர்விநியோகம், கட்டட நிர்மாணம், சுகாதார பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் காபூலின் தென்மேற்குப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இருவர் வழிமறித்துக் கொல்லப்பட்டிருந்தார்கள்.

தலிபான் தீவிரவாதிகளே இக்கொலைகளுக்குப் பொறுபென என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அண்மைக் காலத்தில் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




தமிழ்நாட்டிலிருந்து இங்கு வருபவர்கள் சிலர் - சில தலைவர்கள் இங்குள்ளவர்களுக்கு எதுவுமே தெரியாது என்ற சிந்தனைகளுடன்தான் வருகிறார்கள். இவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, இலக்கியக்காரர்களாக இருந்தாலும் சரி இப்படித்தான் சிந்திக்கிறார்கள். அவர்கள் - தங்களை எல்லாம் தெரிந்த மேதாவிகள் என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால், இங்குள்ளவர்களுக்கு எதுவுமே தெரியாதென்று நினைத்துப் புத்திசொல்லும்போதுதான் தப்பு வந்து விடுகிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிகளில் ஒருவரும் முன்னாள் பருத்தித்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.கந்தையா அவர்களின் நிறைவு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவரும் இந்திய நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினருமான திரு. கா.பாண்டியன் நினைவுப்பேருரை நிகழ்த்தினார்.

"மக்களைப் பாதுகாப்பதற்காக போராட்டம் நடத்துகிறவன் போராட்டத்தை நீடிக்கமாட்டான். போரைத் தொடங்கியவனுக்கு அந்தப் போரை முடித்து வைக்கவும் தெரிந்திருக்கவேண்டும்.

"தமிழ்பேசும் மொழியால் ஓர் இனம் வாழும் இடத்தால் அவன் ஒரு உலகப்பிரஜை வாழும் நாடுகளில் எல்லாம் தமிழன் தனிநாடு கேட்பதாக இருந்தால் அவன் உலகின் எதிரியாகவல்லவா போய்விடுவான்.

"இந்தியாவின் பஞ்சாப்பில் சீக்கியர்கள் , தனிநாடு கோரி ஆயுதப்போராட்டம் நடத்தினார்கள். அப்போராட்டத்தை நடத்தியவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி அதை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. ஆயுதத்தைத் தூக்கியவர்களை ஆயுதத்தைக் கொண்டே அழித்து விட்டார்கள்.

இதைப்படித்ததும் நல்லவேளையாக பாண்டியன் இப்போது இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கவில்லையென்று எண்ணத்தோன்றியது. இதேசமயம் இவரிடம் இந்திய மத்திய அரசும் இலங்கைப் பிரச்சினை பற்றி ஆலோசனை கேட்பதும் நல்லதாய்ப் போயிற்று என்றும் தோன்றியது.

ஒன்றுமட்டும் உண்மை. தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இலங்கையில் நடைபெறும் விடுதலைப் போராட்டம் பற்றியோ இலங்கையின் அரசியல் பற்றியோ எதுவும் தெரியாது என்பதே அதுவாகும். அவர்கள் இவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள முனைவதும் இல்லை, அதைப் பற்றிச் சிந்திப்பதும் இல்லை. தமிழ்நாட்டு இலக்கிய மேதைகளும்கூட ஈழத்து இலக்கியம் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள முயற்சிக்காமலே கருத்து வெளியிடுவார்கள்.

இந்தியத் தலைவர்கள் குறிப்பாகத் தமிழ்நாட்டுத் தலைவர்கள் தங்கள் நாட்டின் விடுதலைப் போராட்டம், இந்தியாவின் சுதந்திரம், இந்தியன் என்ற பெருமை பற்றித்தான் திரும்பத் திரும்பப்பேசிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களுடைய விடுதலை, அதற்காக அவர்கள் நடத்தும் போராட்டம் பற்றியெல்லாம் அவர்கள் சிந்திப்பதில்லை, சிந்திக்கவும் மாட்டார்கள்.

இந்தியாவில் ஐம்பதுகளில் நிலவிய கடும் பஞ்சத்தின்போது, புளியங்கொட்டை, பருத்திக்கொட்டை போன்றவற்றையும் மக்கள் உணவாக்கின்கொள்ள வேண்டுமென்று அன்றைய இந்திய உணவு அமைச்சர் ஜே.எம்.முன்சுஷி மக்களைக் கேட்டிருந்தாராம். அச்சமயம் அமைச்சர் முன்சுஷி சென்னைக்கு வருகை தரவிருந்தார். இவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக தி.மு.கழகம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தும்படி வேண்டுகோள் விடுத்திருந்தது. இதைப்பற்றி அண்ணா கூட்டத்தில் பேசுகையில், கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொள்ளும் மக்கள் ஆர்ப்பாட்டமாக இருக்கவேண்டும். 'ஆனந்த விகடன்' கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் பெரியார், அண்ணா மற்றும் மேலே பறந்த கருநாகம் என்று கேலிச்சித்திரத்தால் கிண்டல் செய்தமாதிரி இருக்கக்கூடாது என்று சொன்னார்.

திரு.தா.பாண்டியன் இலங்கைத் தமிழ்மக்களுக்காக தமிழ்நாட்டில் நடந்த 'பந்த்' (கடையடைப்பு) தான், ஒரு காகம்கூடப் பறக்காமல் மிக வெற்றிகரமாக நடந்த 'பந்த்' என்று குறிப்பிட்டிருந்தார். இப்படியான தமிழ் சகோதரர்களைப் பகைத்துக்கொண்டுவிட்டதாகவும் அவர் சொல்லியிருக்கிறார்.

சரிதான், ஆனால் இந்தியாவிலிருந்து அமைதி காக்கவந்த இந்திய இராணுவம் பொது மருத்துவமனைக்குள் நுழைந்து நோயாளர்கள், மருத்துவர்கள், தாதிகள் என நூற்றுக்கணக்கானவர்களை மனிதாபிமானமே இல்லாமலே சுட்டுக்கொன்றமை பற்றியோ மற்றும் பல இடங்களில் அந்த இராணுவம் அப்பாவி மக்களுக்குச் செய்த கொடுமைகளைப் பற்றியோ பாண்டியன் எதுவும் பேசவில்லையே, வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லையே ஏன்?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழில் கண்ணிவெடி தொடர்பாக நாடக ஆற்றுகை செயற்பாடுகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியேறியவர்களுக்கு கண்ணிவெடிகள், மிதிவெடிகள், பொறிவெடிகள் சம்பந்தமான விழிப்புணர்வை ஊட்டும் வகையில் நாடக அரங்கச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அகதிகள், புனர்வாழ்வு நிறுவனத்தினர் இந்தச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான தமது செயற்பாடுகளை நேற்று அவர்களது அலுவலகத்தில் வைத்து, பத்திரிகையாளர்களுக்கு விரிவாக எடுத்துக் காட்டினர்.

இதில் வெடிபொருள்கள் கூடுதலாக உள்ளதென சந்தேகிக்கப்படும் இடங்களில், மீளக்குடியேறிய மக்களுக்கு வெடிபொருள்கள் சம்பந்தமான ஆற்றுகைகளைத் தயாரித்து காண்பித்தல், அபாயகரமான பகுதிகளில் இயங்கும் பாடசாலை சிறுவர்களுக்கான நாடக. ஆற்றுகை, மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்கால நலனைக் கவனித்தல் போன்ற தமது செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்ததுடன், பத்திரிகையாளர்களின் கருத்துக்களையும கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு இடங்களில் முகாம் அமைத்து இருந்த இராணுவத்தினரால், இவ்வாறான மிதிவெடிகள், பொறிவெடிகள் நாட்டப்பட்டதும், அவை முழுமையாக இதுவரை அகற்றப்படாமல் உள்ளதும், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியேறிவரும் மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரின் இவ்வாறான செயற்பாடுகள் மிகுந்த பயனை அளிக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## நாற்சந்தி

தேசிய கூட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பாக, சந்திரிகா நேர்மையும் - உண்மையுமிக்க அரசியற்கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார் அல்லவா.

அவரின் அழைப்பை ஏற்று, எவராவது சென்றார்களா என்பது இதுவரை தெரியவில்லை.

அப்படி எவராவது சென்றிருந்தால் அவரது நேர்மையும், உண்மையும் உறுத்திப்படுத்த எத்தகைய நற்சாட்சி பத்திரத்தை அவர் எடுத்துச்சென்றிருப்பார் என்பதுதான் கேள்வி.

அரசியலில் ஊழலும், மோசடியும் சிறப்புப்பண்புகளாகியுள்ள, சிறிலங்காவில் உண்மையையும் நேர்மையையும் யாரிடம் தேடுவது?

நாற்சந்தியில் நாலுபேர் நாலுவிதமாக இதைப்பற்றி கதைக்கவே செய்தார்கள் ஒருவர்கூறினார்.

'உண்மையும், நேர்மையும் மதிப்பிட சந்திரிகா எந்தஅளவுக்கு ஊழலும் மோசடியுமற்றவர் என்பதை முதலில் நிரூபிக்கவேண்டும்... இது அவரால் முடியுமா?'



-தெருவாசி

## லேக் ஹவுஸ் முன்பாக இன்று போராட்டம்

(கொழும்பு)

லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தில், பணியாற்றிய இரண்டு ஊடகவியலாளர்கள் பதவி விலக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த எதிர்ப்பு போராட்டம், லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திற்கு முன்பாக இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

# பொலிஸ் காவலில் கைதி மரணம்; 20 பொலிஸாருக்கு இடமாற்றம்!

(கொழும்பு)

பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்தபோது, 58 வயதான கைதி ஒருவர் இறந்த சம்பவத்தையடுத்து- இருபது பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட, இருபது பொலிஸாருக்கே இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

கசிப்பு வழக்கில் கைதுசெய்யப்பட்ட ஜினதாஸ என்ற, ஐந்து பிள்ளைகளின் தந்தை பொலிஸாரின் காவவலில் இருந்தபோது மரணமாகியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, இரண்டு ஊர்காவற்படையினரை பொலிஸார் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இராணுவத் தளபதி...

கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, இந்த வழக்கு விசாரணை - வவுனியா நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

1995 ஆம் ஆண்டில் வன்னி இராணுவத் தளபதியாக இருந்த லயனல் பலகல்லவை இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு- வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.

# நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு விவசாய அமைப்புக்களின் ஒன்றியம் அரச அதிபருக்கு மகஜர் கையளிப்பு!

அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்வதனை நிறுத்தியதை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென கோரி, மன்னார் விவசாய அமைப்புக்களின் ஒன்றியம் கடிதமொன்றினை மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் - தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரச நெல் கொள்வனவு செய்யும் சபையினரால், கடந்த சில மாதங்களுக்கு முன் 13.50 ரூபாவுக்கு நெல் எம்மிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால், தற்போது அந்தக் கொள்வனவு நிறுத்தப்பட்டதனால் தனியார்கள் 9.50 ரூபாவுக்கே கொள்வனவு செய்கின்றனர். இதனால் நாம் மிகவும் பாதிப்படைந்துள்ளோம்.

அத்துடன் மன்னாரிலுள்ள கற்கிடந்தகுளம், சிறுகண்டல், முருங்கன் பகுதிகளில் பெருமளவு நெல்லினை விற்பனை செய்யமுடியாமல் விவசாயிகள் உள்ளனர்.

எனவே இதற்கான தீர்வினை நீங்கள் பெற்றுத்தரவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (201)

## மகாநாயக்க தேரரின் இறுதிச்சடங்கு

காலம் சென்ற அதி சங்கைக்குரிய மடிக்கே பஞ்ஞாசிக மகாநாயக்க தேரரின் இறுதிச் சடங்குகள்- எதிர்வரும் சனிக்கிழமை நடைபெற விருப்பதால், அந்த தினத்தை தேசிய துக்கதினமாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

பம்பலப்பிட்டி வஜிராராம விகாரையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது, சகல நிறுவனங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுவதெனவும், அன்றையதினம் ஒழுங்குசெய்யப்பட்ட களியாட்ட நிகழ்ச்சிகள், அரசாங்க விழாக்களையும் ரத்துச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இறுதிச் சடங்குகளில் பங்குபற் றுபவர்கள், வெண்ணிற ஆடை அணிந்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

# ஐ.நா.செயலாளர் கோபி அனான் அடுத்த மாதம் இலங்கை வருகை

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான்- அடுத்த மாதம் 10 ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

இரு தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் கோபி அனான், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்த உள்ளார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் உதவித்திட்ட அமைப்புகளின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களையும், நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, நாடாளுமன்றத்தில் நடைபெறும் விசேட அமர்வில் கலந்துகொண்டு- கோபி அனான் உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யசூஷி அகாஷி இன்று...

தும் இவர் பல்வேறு அரசியல் தலைவர்களுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஐந்துதினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அகாஷி - ஜனாதிபதி, பிரதமர், ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த உறுதிசெய்யும் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

வடக்கு - கிழக்கிற்கு விஜயம் செய்யும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் கண்காணிப்புக்குழுவினர் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## தமிழ் இளைஞர்கள்...

ஒழுங்கை மதிப்பவர்கள் கல்விமான்கள் கடும் உழைப்பாளிகள் என்று அவர் மேலும் சொன்னார்.

குற்றச்செயல்லில் ஈடுபடுபவர்கள் 17 அல்லது 18 வயதுக்கும் மற்றும் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள் என்றும், அவர் கூறினார்.

இந்த வன்முறைகளில் ஈடுபட்டதாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பத்திரிகையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பல அளவுகளிலான கத்திகள், அடிதடி அரிவாள்கள் போன்ற ஆயுதங்களும், ஒரு துப்பாக்கியும் ஊடகவியலாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

### கண்டிக்கும் கொழும்புக்கும் இடையே

# மலேசிய நாட்டின் உதவியுடன் அதிவேகப் பாதை அமைப்பு!

கண்டிக்கும் - கொழும்புக்கும் இடையே, அதிவேக பாதை ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மலேசிய நாட்டு போக்குவரத்துத்துறை அமைச்சர் ஈஸ்தீன் ஆகியோர் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு- மலேசியா சென்றிருக்கும் பிரதமர் , பல்வேறு ஒப்பந்தங்களை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

நேற்று மலேசிய போக்குவரத்துத் துறை அமைச்சருடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கண்டிக்கும் கொழும்புக்கும் இடையில் தற்போது மூன்று மணிநேரம் செல்லும் போக் குவரத்து சேவை இந்த வீதி அமைப்பதன் மூலம் 55 நிமிடத்தில் செல்ல முடியும் என, தெரியவருகின்றது.

### அதிரடிப்படையின்...

ராஜா வழங்கியுள்ளார். இதேவேளை- பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே விசேட அதிரடிப்படையின் புதிய கட்டளைத்தளபதியாக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படைக் கட்டளை அதிகாரியாக இருந்த பொலிஸ மா அதிபர் நிமால் குணதிலக நீண்டகாலமாக புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டுவந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### நிறைவேற்று...

காரத்தை பகிர்ந்தளிப்பது மூலம் நெருக்கடிகளுக்கு தீர்வு காணமுடியாது இதனை வரலாறு உணர்ந்துகிறது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் எழும் தேவைகளை கருத்திற்கொண்டு, அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது அவசியமானது எனவும் அவர் கூறினார்.

இந்த விடயங்கள் குறித்து அடுத்தகட்ட பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளோடு கருத்துக்களை பரிமாறுவதற்கு திட்டமிட்டிருபபதாகவும் - பேராசியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## ரோக்கியோ மாநாட்டின்...

கள் ஏற்படாமல் இருப்பதானது, விடுதலைப் புலிகளை ரோக்கியோ மாநாட்டில் தொடரான கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதவர்களாக ஆக்கியுள்ளது.

மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என ஒதுக்கப்பட்ட நிதியினைப் பெற்று, அதனை வழங்கக்கூடிய உறுதியான அமைப்பு இல்லாமையே நாம் இடைக்கால அலகொன்றினை கோருவதற்கான காரணமாகும்.

இப்படியான செயற்திறன் மிக்கதோர் இடைக்கால நிர்வாக அலகினால் மாத்திரமே, நிதியினைப் பெற்று பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையைச் செய்யமுடியுமென, விடுதலைப் புலிகள் நம்புகின்றனர்.

இது தொடர்பான, எமது தலைமைப்பீடத்தினது நிலைப்பாட்டை கிளிநொச்சியில் 14 ஆம் திகதி நடைபெறும் அகாஷியுடனான சந்திப்பின்போது விளக்குவதாக அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேலைக்கு ஆட்கள் தேவை

ஹோட்டல் ஒன்றில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உடன் ஆட்கள் தேவை.

- ☆ ரீ மேக்கர்
- ☆ உணவு பரிமாறுபவர்
- ☆ உதவியாளர்கள்
- ☆ பில் கிளார்க்

தொடர்புகளுக்கு
ரஹ்மான் ஹோட்டல்
226. K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(480)

## தமிழ்ச்செல்வன் - டென்மார்க் தூதுவர்...

இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது. இந்தச் சந்திப்பினை முடித்து வந்த தூதுவர் பத்திரிகையாளர்களிடம் டென்மார்க்கைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் பிரிவினரைச் சேர்ந்தவர்கள் இங்கு கண்ணிவெடிகளை அகற்றுவதாகவும், இந்தத் திட்டத்துக்கு தமது அரசு 130 மில்லயன் குறோணர் ஒதுக்கியுள்ளதாகவும், இதில் முதற்கட்டமாக 40 மில்லியன் குறோணர் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து, மாலை 2.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப் பணியகத்தில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, உதவித்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன், டென்மார்க் தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் மனோகரன், கொழும்பு தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சந்துரு, தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, ஆகியோருடன் டென்மார்க் தூதுவர் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டதுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனம், முதியோர் இல்லம், குருகுலம் ஆகியவற்றையும் தூதுவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதனை அடுத்து, பரந்தனில் டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் - நடத்தப்படும் கண்ணிவெடி அகற்றல் பயிற்சியினையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்று கிளிநொச்சியில் தங்கியிருந்த டென்மார்க் தூதுவர் - இன்று முல்லைத்தீவு சென்று அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடத்தப்பட்டுவரும் செயற்திட்டங்களை பார்வையிடுவார். (108)

**இன்று வெளியாகிய சமூக சேவை உத்தியோகஸ்தர் போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாத் தாளிற்கான விடைகள் நாளைய பத்திரிகையில் வெளியாகும்.**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.